
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



GAZETTEER UNIT
APR '70
MADRAS RECORD OFFICE BUILDINGS.

ஸ்ரீநிவாசப் பெருமாள்,
கருடவாகனசேவை

மாலை 12 ] சௌமிய—பங்குனி—ஏப்ரல், 1970 [ மணி 7

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



தருமையாதீனம் சீர்காழிச் சட்டைநாத சுவாமி கோயில், திருஞான சம்பந்தர் கல்யாண மண்டபத்திற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A., அவர்கள், அடிக்கல் நாட்டுதல் (1-3-70).

## பொருளடக்கம்


1. தெய்வம் என்பதோர் சித்தம்
2. திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா
3. பெரியவாச்சான்பிள்ளை வைபவம்
4. இந்துமதத்தின் சிறப்பு
5. மகாபாரதம்
6. பிரபுலிங்க லீலை
7. வைணவம்
8. ஸ்ரீகண்ட சிவாசாரியர்
9. ஆழ்வார் விடுத்த வினா
10. மாற்றி நின்றார் வழி
11. கருவூர்த்தேவர்
12. அயல் நாட்டு அறிஞரின் அன்புக் கடிதம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-


தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்




மாலை 12 ] சௌமிய — பங்குனி — ஏப்ரல், 1970 [ மணி 7

MADRAS RECORD OFFICE BUILDING
APR 1970

# “ தெய்வம் என்பதோர் சித்தம் ”

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

**முன்னுரை :**

மக்களாகப் பிறந்தோர் அடைதற்குரிய பேறுகள் பல. அவைகளுள் ‘தெய்வம் ஒன்று உண்டு’ என்னும் நம்பிக்கையையுடைய மனத்தைப் பெறுதலும் ஒன்றாகும். குருடனுக்குக் கண்கள் உள்ளன, ஆயினும் பார்வையில்லை. செவிடனுக்குக் காதுகள் இருக்கின்றன, ஆயினும் கேட்கும் தன்மை இல்லை. ஊமைக்கு வாய் உள்ளது, எனினும் பேசும் ஆற்றலைப் பெறவில்லை. குருடும் செவிடும் ஊமையும் எங்ஙனம் குறைபாடுடையனவாகக் கருதப்படுமோ, அங்ஙனமே கடவுள் நம்பிக்கை வாய்க்கப் பெறாத மனமும், குறைபாடு உடையதாகக் கொள்ளப்படுதல் பெரிதும் பொருந்தும்.

**நிரம்பா வாழ்க்கை :**

இக் கருத்தினையே, ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான் தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலில், நன்கினிது எடுத்து மொழிந்து,

‘‘கோளில் பொறியிற் குணம் இலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை’’

எனச் சிறப்பாகத் தலையின் மீது வைத்துக் கூறி வற்புறுத்தினார். இறைவனை வணங்காத தலைகள் பயனில எனவே, இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும், தொழாத கைகளும், நம்பாத மனமும் பிறவு மெல்லாம் கூட, ஒரு சிறிதும் பயனில்லாதன என்பது சொல்லாமலே உபலக்கண முறையாற் பெறப்படும். கடவுள் உணர்ச்சி கலக்கப் பெறாத வாழ்க்கையினை

''நிரம்பா வாழ்க்கை'' எனப் பரணர் என்னும் சங்க காலப் புலவர், அகநானூற்றுப் பாடல் (125) ஒன்றில், அழகுறக் குறிப்பிடுகின்றார்.

**மணிவாசகர் :**

'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும் ஊமும் செவிடும்' ஆகிய குறைபாடுகள் நீங்கி 'உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதல்' எங்ஙனம் அரியதோ, அங்ஙனமே 'தெய்வம் ஒன்றுண்டு' என்னும் நம்பிக்கை இயல்பாகவே அமையப்பெற்ற முன்னுடையராகப் பிறத்தலும் புண்ணியத்தின் பாலதாகும். அதுபற்றியே மாணிக்கவாசகப் பெருமான் 'தெய்வம் என்பதோர் சித்தம்' அமையப்பெறுதல், ஒரு சிறந்த பெறலரும் பேறு எனக் குறிப்பிட்டருளினர். (போற்றித் திருவகவல், 42)

158578

**ஏதுக்கள் :**

'தெய்வம் என்பதோர் சித்தம்' இயல்பாகவே அமையப் பெறாதவர்களுக்கு, அஃது உண்டாகும் வண்ணம், நம் தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் எத்தனையோ அறிவுரைகளும் அருளுரைகளும் வழங்கியுள்ளனர். சிறப்பாக நம் சைவ சித்தாந்த சாத்திரங்கள், ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதித்துக் காட்டியுங்கூட, நமக்குத் தெய்வ உண்மையினைத் தெளிவுறுத்துகின்றன.

இந்நாளில் மேலை நாட்டு அறிஞர்களும் மனித வாழ்க்கைக்குத் தெய்வக் கொள்கையின் இன்றியமையாமையினை உணர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்.(1) இயற்கையமைப்புக் காரணம், (2)சமய வாழ்வியல் அனுபவக் காரணம் (3)ஒழுக்க நெறிக் காரணம், (4)குறிக்கோள் வகைக் காரணம், (5)தொழிற்படு முறைமைக் காரணம், (6)புறத்தோற்றவுண்மைக் காரணம், (7)நம்பிக்கையுரிமைக் காரணம், முதலிய பலவற்றைக் காட்டி, மேலைநாட்டு அறிஞர்கள் கடவுளுண்மையினை நிறுவுவர்.

**வாழ்க்கைச் சிக்கல்கள் :**

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய வுணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்து மறைந்து போதலை நாம் நாடொறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. பெருத்த துன்பங்களும், நோய்களும் தொல்லைகளும் நேருங்காலெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணர வேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கியாண்டு, யாவும் தம்மாலேயே நடப்பனவாகக்கருதித் தருக்குக் களித்து நிற்போரும், பின்னொரு ஞான்று 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கக் காண்கின்றோம். தன்னுடைய அறிவும் முயற்சியும் ஆற்றலும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய முழுமுதற் பெரும்பொருளின் துணையைத் தேடி அடைய, மனிதன் பெரிதும் ஆவலுற்று அலைகின்றான்.

**உலகியல் நிகழ்ச்சிகள் :**

பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து காணுந்தோறும், அவற்றிற்கெல்லாம் மூல முதற் காரணமாக இருந்து இயக்கிவரும் ஒப்புயர்வற்ற முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை யாவரும் இனிது உடன்படவே வேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக முடிகின்றது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோரும், சின்னாளில் அவற்றினை வெறுத்தொதுக்கி இனையதென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரின்பத்தினை விழைந்து நின்று, உள்ளம் அமைதியிழப்ப ஏக்கற்று அலமந்துழல்கின்றனர். நமக்குத் துணை என நம்மால் நம்பப் பெறுபவர்கள் பலரும் நம்மைக் கைவிட நேரும் நிலையில், ''நான் இந்த எட்டாம் ஹென்றிக்கு ஊழியஞ் செய்ததை

---

*(1)* The Teleological and Evolutionary argument.

*(2)* The Religious Experience argument

*(3)* The Moral argument

*(4)* The Idealistic argument

*(5)* The Pragmatic argument

*(6)* The Realistic argument

*(7)* The Right to Belive argument

N70.12-7 (144)



விட இறைவனுக்கு ஊழியஞ் செய்திருப்பின், அப்பெருமான் என்னை இத் தள்ளாத வயதில் இங்ஙனம் கைவிட்டிருக்கமாட்டான்'' (1)எனக் **கார்டினல் உல்சி** என்பார் கதறிப் புலம்பியது போல, இறைவனின் துணையை எதிர் நோக்கியே நாமும் வருந்திக் கதறி அலறும் நிலையை அடைகின்றோம். இனைய செய்திகள் பலவும் கருதுவார்க்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதல் திண்ணம்.

## வியத்தகு அமைப்பு :

''நமது மனிதவுடம்பில் 600 தசை நார்கள், 1000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப்பையில் தேன் கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள், $3 \times 12^{12}$ நரம்புக் கண்ணறைகள், 300 லட்சம் வெள்ளை யணுக்கள், $18 \times 10^{13}$ சிவப்பணுக்கள், $2\frac{1}{2}$ லட்சம் தலை மயிர்கள் ஆகியவை உள்ளன. 70 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடி தடவைகள் துடிக்கின்றது. 5,00,000 டன் இரத்தத்தை வெளியேற்றி உடம்பிற் பரவச் செய்கின்றது. நாள்தோறும் 36 அவுன்ஸ் அளவு உமிழ்நீர் சுரந்து விழுங்கப்படுகின்றது. 120 முதல் 240 அவுன்ஸ் வரை வயிற்றிற் செறிநீர் ஊறி, உணவைச் செறிப்பித்துக் கிருமிகளைக். கொல்லுகின்றது (2). இது போன்ற செய்திகளை அறிந்து எண்ணுந் தோறும் நாம் பெரிதும் இறும்பூது எய்துகின்றனம் அல்லமோ? நம் உடலாகிய பிண்டத்தின்கண் நிகழும் இத்தகைய நிகழ்ச்சிகளைப் போலவே, அண்டத்தின் கண்ணும் எத்துணையோ பலப்பல வியத்தகு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றை யெல்லாம் ஒரு சிறிதேனும் உன்னித் துணரவல்லார், கடவுள் உணர்ச்சி யுடையவராகாமல்இருத்தல் ஒல்லுமோ?

## சார்லஸ் எலியட் :

சர் சார்லஸ் எலியட் என்னும் பேரறிஞர், ''யாராவது கடவுள் இல்லை என்று கூறினால், இறந்தொழியக் கூடிய, பரமாணுவினும் மிகச் சிறிய, ஓர் அற்ப மனிதன், இவ்வுலகின் ஓர் அணுத்துணைப் பரப்பில், ஒரு நொடிநேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிறைந்து எல்லையின்றி விரிந்து விளங்கும் பேரண்டத் தொகுதிகளையெல்லாம் நன்கினிது கண்டுணர்ந்து வைத்துங்கூட, மெய்ப்பிக்கப்பட முடியாத ஒரு கருத்தை, இத்துணை உறுதியாகக் கொள்ளுதல் எவ்வாறு இயலும்? என்றுதான் நான் வினவுகிற்பேன்'' (3) என்று குறிப்பிடுகின்றார்.

## சிசரோ :

இங்ஙனமே, இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோம நாட்டில் உயிர் வாழ்ந்திருந்த சிசரோ என்னும் பெருநாவலர், ''இயற்கைப் பொருள்களில் மனிதனின் அறிவு-ஆராய்ச்சி ஆற்றல் என்பனவற்றால் செய்து நிறைவேற்ற இயலாத ஏதோ ஒன்று அமைந்து கிடக்கின்றது. அது மனிதனை விடச் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும்! அது கடவுளைத் தவிர வேறு யாதாக இருத்தல் கூடும்!''(4) என அறைகூவி அறிவுறுத்தியிருப்பதும், ஈண்டு நாம் உணர்தற்குரியது.

---

(1) Had I but served God, instead of Henry, the Eighth, He would not have deserted me like this in my old age."

—Cardinal Wolsey.

(2) "There are in the human body 600 muscles, 1000 miles of blood vessels, 550 arteries, 16 square feet of skin, $1\frac{1}{2}$ million sweat glands, 700 million cells, in honeycomb fashion in the lungs, $3 \times 10^{12}$ nerve cells, 30 million white Corpuscles, $18 \times 10^{13}$ red corpuscles and 2,50,000 hairs on the head. In 70 years, the heart beats 2500 million times and lifts 5,00,000 tons of blood. 3 pints of saliva are swallowed daily and the stomach generates 5 to 10 quarts of gastric Juice daily which digests the food and destroys the germs".

(3) "If you say ''There is no God'' I can only ask how a speck of a mortal, living for a moment, of an atom of an earth in plain sight of an infinite universe full, beauty of wonder and design, can confidently hold so improbable a view".

—Sir Charles Eliot.

(4) ''There is something in the nature of things, which the mind of man, which reason, which human power cannot effect, and certainly that which produces this must be better than man. What can this be but God?".

—Cicero.

**பேராசிரியர் ஜங் :**

உலகப் புகழ்பெற்ற உளநூல் அறிஞர் ஆகிய பேராசிரியர் ஜங் என்பவர் பின்வருமாறு கூறுகின்ருர். ''கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில்—அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல்—தம் இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமய வுணர்வு (தெய்வங் கொள்கை) கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள், ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்ற தற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு மதமும் அவ்வக்காலத்தில் தன்னைப் பின் பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறை வுணர்ச்சியை, அவர்கள் பெருமல் இழந்து விட்டமையே யாகும். அவர்களில் ஒருவ ராவது மீண்டும் சமயவுணர்வு கைவரப்பெரு மல், உண்மையில் தம்முடைய பிணி தீரப் பெற்றிலர்''(5)

இங்ஙனம் பேராசிரியர் ஜங் அவர்கள் கூறுவது, ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான்,

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என இற்றைக்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னர் இயம்பியருளிய பொய்யா மொழியின் எதிரொலி போலவே காணப்படுகின்றது அன்ருே?

**பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் :**

இவ்வாறே, உலகப் புகழ் பெற்ற மற்ருெரு பேரறிஞரும், தத்துவ கணித மேதையும் ஆகிய பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறுவதும், நம்மனேர் கருத்தில் இருத்துதற்குரியது. ''நம் காலநிலைக்கு, வேண்டுவன சில இருக்கின்றன; விலக்கப்பட வேண்டுவன சில உள்ளன...நான் கூறப்புகும் செய்தியின் அடிப்படை அல்லது வேர் யாதெனின், மிக எளிமையானதும் மிகப் பழமைமுறையில் அமைந்ததுமான ஒன்றேயாம் நான் கூற முற்படுவது மிக மிக எளிமையும் பழமைமுறையும் வாய்ந்ததாகல் பற்றி, ஒரு சிலர் என்பாற் புன் முறுவல் பூத்து, என்னை ஏளனம் செய்யக்கூடுமே என்றஞ்சி, அதனைக் குறிப்பிடுவதற்கு நான் நணுகின்றேன். அதனைக் குறிப்பிடுவதற்காக அருள் கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள்! அன்பு, 'இறைமை அன்பு' அல்லது சமய உணர்வோடு கூடிய இரக்க வுள்ளம் ஆகும். இவ்வுணர்வை நீங்கள் பெறு வீர்களாயின், உங்கள் வாழ்க்கைக்கு ஓர் உயரிய நோக்கமும், செயல்களுக்கு ஒரு வழி காட்டியும், மனவுறுதிக்கு ஒரு காரணமும், அறிவின் நேர்மைக்கு ஓர் இன்றியமையாத தேவையும் பெற்றவர்கள் ஆவீர்கள்'' (6)

**வால்ட்டேர் :**

பிரஞ்சுப் புரட்சி தோன்றுவதற்கு வித் திட்டு வைத்த பேரறிஞராகிய வால்ட்டேர், தொடக்கத்திற் சமய எதிர்ப்பாளராக இருந்து வந்தாராயினும், நாளடைவில் கடவுளுணர்ச்சியுடையவராக மாறி நின்ருர்,

---

(5) "During the past thirty years, people from all the civilised countries of the earth have consulted me. Among all my patients in the second half of life that is to say, over thirty-five years—there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one of them fell ill, be cause he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook."

—Professor C. G. Jung.

(6) "There are certain things that our age needs and certain things it should avoid. The root of the matter is a very simple and old-fashioned thing, so simple that I am almost ashamed to mention it, for fear of the derisive smile with which wise cynics will greet my words. The thing I mean—please forgive me for mentioning it—is love, Christian love, or compassion. If you feel this, you have a motive for existence, a guide in action, a reason for courage, an impressive necessity for intellectual honesty".

—Dr. Bertrand Russel.

(7) ''கடவுள் என்பவர் இல்லாவிட்டாலும், அவரை உண்டாக்குவது இன்றியமையாத தாகும்'' எனத் தம் நூலொன்றில் அவர் எழுதுகின்றார். (8)''கடவுளைத் தொழுது கொண்டும், நண்பர்களை நேசித்துக் கொண்டும், என் பகைவர்களை வெறுக்காமலும், குருட்டு நம்பிக்கைகளை அருவருத்துக்கொண்டும், நான் இறக்கின்றேன். (ஒப்பம்) வால்ட்டேர், பிப்ர வரி, 28, 1778'' என்னும் அறிக்கையைத் தம் செயலரிடம் எழுதியளித்துவிட்டு, அவர் உயிர்நீத்தார்.

**முடிவுரை :**

இன்னோரன்ன சுவைமிகு செய்திகள் பலவும், ''தெய்வம் என்பதோர் சித்தம்'' நம்மனோர்க்கு எத்துணை இன்றியமையாதது என்பதனை விளக்க வல்லனவாம். நாம் அனை வரும் தெய்வ வழிபாட்டுணர்ச்சி யுடைய சீலர்களாய்த் திகழ்ந்து, நலம் பெற்றுய்ய இறைவன் திருவருள் துணை செய்வதாக!

—ஆசிரியர்.

---

(7) "If God did not exist, it would be necessary to invent him."

(8) " I die adoring God, loving my friends, not hating my enemies and detesting superstitution. (signed) Voltaire. February 28, 1778.''

—Prof. Will Durant,
The story of Philosoppy, p.

---

## செய்திச் சுருக்கம்

**இந்துசமய மாநாடு :**

கன்னியாகுமரி அறநிலைய வாரியத்தின் ஆதரவிலும், ஹைந்தவ சேவா சங்கத்தின் பொறுப்பிலும், கன்னியாகுமரி மாவட்டம் **மந்தைக்காடு** என்னும் இடத்தில் முப்பத்து நான்காம் ஆண்டின் இந்து சமய மாநாடு, 6—3—70 முதல் 10—3—70 வரை, சிறப்புற நடை பெற்றது. இம்மாநாட்டைத் தவத்திரு சுவாமி அபேதானந்தபாரதி மகராஜ் அவர்கள்திறந்து வைத்தருளினார்கள். கன்னியாகுமரி அறநிலைய வாரியத் தலைவர் திரு. டாக்டர், எஸ். நடேசன், B.Sc.,M.B.B.S. அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

விவேகானந்த ஆசிரமம் வெள்ளிமலை தவத்திரு சுவாமி மதுரானந்தஜி, உயர்திரு ஏ. ஈசுவரப்பிள்ளை, (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்), கேரள சட்டமன்றத்தின் சபாநாயகர் ஸ்ரீதாமோதரன் போற்றி, திரு ஏ. கே. சுந்தரம்பிள்ளை, திரு வி. ஜனார்த்தனன், திரு சி. தங்கைய நாடார், திரு ஏ. பத்மநாப நாடார், திரு எஸ். வைத்தியநாத ஐயர், பி ஏ., பி.எல், திரு சி. பொன்னுமணி நாடார், நாகபுரி திரு ஏகநாத்ரானடே, திரு இராமகோபாலன், திரு வி. எம். கருணாகரநாயர்.

திருமதி ஜி. லட்சுமி, என். மேனோன் (இந்திய அரசின் முன்னாள் உதவி அயல்நாட்டு அமைச்சர்), திருமதி பி. லலிதாம்பிகை, திருமதி கே. அம்பிகாபிரசாத், திருமதி சரோஜா நாயர், M.A.B.L., திருமதி லலிதாஇராமகிருஷ்ணன், M.A, திருமதி ஜானகி சிதம்பரம், குமாரி ஆர். ஆனந்தபாய், B.Sc.,B.T., திரு பி. இராமசாமிப்பிள்ளை, B.A,B.L., திரு எஸ். கோவிந்தப் பிள்ளை, திரு இராஜாமணி நாடார், திரு இராமானுஜம், டாக்டர் என். சந்திரகாந்த முதலியார், திரு கே. சந்திரசேகரப்பிள்ளை. B.A,B.L. திரு வி. கோபால்ஜி. திரு எஸ். டி. பாண்டியன் நாடார், B.A,B.L., திரு வி. தவசிமுத்து, திரு சதாசிவன் நாயர், காலசாமி, சிதம்பரதாணுப்பிள்ளை, தாணுமாலயன்பிள்ளை.

திரு ஆறுமுகம்பிள்ளை, B.A.,B.L., கோபாலகிருஷ்ணப்பிள்ளை, அருணாசலம் M.A.,Ph.D. 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், M.A.M.O.L.. தவத்திரு சுவாமி கோபாலானந்த தீர்த்தர், மாணிக்கவாசகம், பி. கே. சிதம்பரம்பிள்ளை, இரத்தினசாமி, இருஷிகேசன் நாயர், அறநிலைய வாரிய உறுப்பினர் திரு ஜி, ஸ்ரீகுமார், B. Sc., பி. ஆர். கோபாலன், எம். பி. மன்மதன் M. A., முதலிய பற்பல பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இசையரங்கு, அரிகதை, ஒட்டந்துள்ளல், கதைகளி முதலிய கலைநிகழ்ச்சிகள் பற்பல சிறப்புற நடைபெற்றன, பல்லாயிரக்கணக்கான பொதுமககள் ஐந்து நாட்களிலும் வந்து கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்ந்தனர்.

—ஆசிரியர்.

# திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

(பொருள் தொகுப்புப் பொழிப்புரை)

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.)

## முன்னுரை :

கந்தர் கலிவெண்பா என்னும் நூல், திருச்செந்தூர் முருகப் பெருமான் மீது, குமரகுருபர சுவாமிகள் பாடியருளியது என்று பலரும் அறிவர். குமரகுருபரர் ஐந்து வயது வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்து, பின்பு திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வி நலனும், கவிபாடும் திறமையும் பெற்ருர். அவர் முதன் முதலாகப்பாடிய நூல் கந்தர் கலிவெண்பாவாகும். இந்நூல் முருகன் அடியார்கள் அனைவராலும் பெரிதும் பாராயணம் செய்யப்பட்டுப் போற்றி வரப்பெறும் மாட்சிமை வாய்ந்தது. இதன்கண் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் சுருக்கித் தொகுத்து விளக்கப்பெற்றுள்ளன. முருகனின் திருவுருவச் சிறப்பும், சிறந்த அரும் பண்புகளும், நன்கினிது விவரிக்கப்பட்டுள்ளன. முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் முழுவதும், இதன்கண் ஒரு குறிப்பும் விடாமல் சுருக்கித் தரப்பெற்றிருக்கின்றது. இதன் இறுதிப் பகுதியில், முருகனிடத்தில் அடியார்கள் வேண்டிப் பெறுதற்குரிய பல நலன்களும் ஒருங்கினிது தொகுத்து உணர்த்தப்பட்டுள்ளன. அளவால் சிறியதாயினும் பொருள் நலத்தாலும், கலை நலத்தாலும், கந்தர் கலிவெண்பாவானது பெரும் சிறப்புடையதாய்க் கவின்மிக்குத் திகழ்கின்றது. இந்நூலின் கருத்துச் சுருக்கத்தை. ஈண்டு இயன்றவரை ஒரு சிறிது காண்போம்.

சிவபிரானும் முருகனும், தந்தையும் மைந்தனும் போல வைத்துக் கூறப்படுவரெனினும், அவர்கள் தம்முள் வேற்றுமை உடையவர்கள் அல்லர். சங்கரனே சண்முகன், ஐம்முகச் சிவனே ஆறுமுகச் சிவன் என்பது பெரியோர்கள் கருத்தாகலின், சைவ சித்தாந்த நூல்களில் சிவபிரானுகிய பதிப் பொருளுக்குக் கூறும் இயல்களும் செயல்களுமெல்லாம் ஈண்டு முருகன் மீது வைத்துக் கூறப்பெறுகின்றன.

## சைவ சித்தாந்தம் :

முருகன், பிரமதேவனும், வேதங்களும், நாத தத்துவமும், நாதாந்தமும், போதாந்தமும் காண இயலாத மெய்ஞ்ஞான வடிவினன். முதல் நடுமுடிவைக் கடந்தவன், என்றும் பேரின்பமாய்ப் பேரறிவாய் விளங்குபவன். இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன். பெயரும் குணமும் உருவமும் அற்று, எங்கும் நிறைந்து ஒளிரும் பரமசிவமாய் நிற்பவன்.

நம்முடைய அறிவிற்கு மேம்பட்டவனுய், படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களுக்கும் அப்பாற்பட்டவனுய், மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங்களுக்கும் எட்டாதவனுய், தனது அருளினுல், பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் ஐந்து வடிவங்கள் கொண்டு, எல்லா உயிர்கட்கும் பற்றுக் கோடு ஆகி, மேலான

இன்பத்தைத் தருபவன் முருகனே. குறைவிலா நிறைவாய், என்றும் உள்ளவனாய், பிறத்தல், இறத்தல், நுகர்தல் என்பவைகள் இல்லாத வனாய், இவ்வுலகில் பலவகையான வியக்கத் தக்க இந்திர சாலச் செயல்களைச் செய்து, தான் மயங்காமல் பிறரை மயக்குபவன்; எதன்கண்ணும் சாராது சார்ந்து, கருவின்றி நின்ற கருவாய், உருவின்றி நின்று, அருளே உருவாய் விளங்குபவன் முருகன். மனம், வாக்கு காயம் என்னும் முக்கரணங்களால் வரும் இச்சை ஞானம் கிரியை என்னும் சக்தி களால், முறையே இலயம் போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளை உடையவனாக அவன் திகழ்கின்றான்.

தான் ஒருவனே, மகேசன் உருத்திரன் திருமால் பிரமன் என்னும் உருவத் திரு மேனிகள் நான்கும், சிவம் சத்தி நாதம் விந்து என்னும் அருவத் திருமேனிகள் நான்கும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி ஒன்றும் ஆகிய ஒன்பதிலும், உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ற ஒரு திருமேனியைக் கொண்டு, ஆணவ மலத்தில் அழுந்தி, உலகியல் வாழ்வில் மயங்கிக் கிடக்கும் விஞ்ஞானகலர் பிரளயா கலர் சகலர் என்னும் மூவகை உயிர்களுக்கும் முத்தியளித்தற்காக மலபரிபாகம் வரும்படி, முருகன் தன் திருக்கடைக்கண் நோக்கம் வழங்கியருள்கின்றான்.

இவ்வாறு ஒன்பதுவகைத் திருமேனிகள் தாங்கி, விந்து மோகினி மான் என முறையே வழங்கப்பெறும் சுத்த மாயைத் தொடர்புற்றுப் பல கடவுளராகி, மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்து வாக்களையும் தனக்குரிய உறுப்புக்களாக முருகன் கொண்டுள்ளான்.

அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றம், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு இலட்சம் கருநிலை வேறுபாடு என்பவற்றுள், ஒன்றில் அனுபவித்துத் தீர்ப்ப தற்குரிய வினைக்கு ஏற்பப் பிறவி எடுத்துக் காற்றாடியும் சகடக்காலும் போல உழலும்படி, உயிர்களின்பால் முருகன் திரோதான சக்தியைச் செலுத்தியருள்கின்றான்,

இன்பமே நிறைந்த சுவர்க்கம், துன்பமே நிறைந்த கொடிய நரகம் என்பனவற்றில், உயிர்கள் இன்ப துன்பங்கள் நுகருமாறு செய் தருள்பவன் முருகனே. அவ்வாற்றால் உயிர் களின் வினைகள் பக்குவப்பட்டுச் சிறிது நல்ல காலம் வந்ததும், ஏணிப்படிகள் போல அமைந்துள்ள புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் சமய நெறிகளை அடைந்து ஈடுபாடு கொள்ளும்படி செய்து, பலவகை விரதங்கள், பிரம்மசரியம் கிரகஸ்தம் வானப்பிரத்தம் சந்நி யாசம் என்னும் ஆச்சிரமங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, உயிர்களைப் படிப் படியே சரியை கிரியை யோகம் என்னும் சாதனங்களிற் செலுத்தி, சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்தி இன்பங்களை உயிர்கள் பெறுமாறு செய்து உதவுபவன் முருகனே.

பின்னர் உயிர்களுக்கு மெய்யுணர்வாகிய ஞானம் மேலோங்கச் செய்து, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிர தரம் என்னும் நால்வகை யான சத்திநிபாத நிலைகள் ஏற்படுதற்கு, இரு வினையொப்பு மலபரிபாகம் என்பன நிகழுமாறு செய்து, அறிவுக்கு அறிவாகி, அதற்கும் எட்டாத நெறியில் விளங்கும் தனது மேலான நிலையை விடுத்துக், கருணையே வடிவமாய் இவ் வுலகில் ஞானசிரியனாகப் போந்து, நம்மை ஆட்கொண்டு அருள்புரிகின்றான் முருகன்.

தன்னுடைய திருநோக்கால் உயிரினங் களின் சஞ்சிதம் என்னும் பழவினையைத் தன் அருட்பார்வையால் போக்கி, தூலதேகத்தின் கருவிகள் அறுபதும், சூக்கும தேகக் கருவிகள் எட்டும், மூலாதாரம் சுவாதிட்டானம் மணி பூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை துவாத சாந்தம் என்னும் ஏழு நிலங்களும், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களும், உயிர்களின் பார்வையிலிருந்து நீங்கும்படி, அறியாமை என்னும் ஆணவமல மறைப்புத் திரையைக் கிழித்து, அறிவினால் காண்பதற்குரிய மெய்ஞ் ஞானக் கண்ணைக் காட்டி யருள்பவன் முருகன்.

திருவடி ஞானமாகிய சிவஞானத்தால், பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் செவ்

விதின் அறியும்படி செய்து, எங்கும் தேங்கி நீக்கமற நிறைந்துள்ள பேரின்ப நிலையைக் காட்டி, போக்கு-வரவு, நினைப்பு-மறப்பு, பகல் இரவு முதலிய வேறுபாடுகள் நிறைந்த விபரீத ஞானத்தை நீக்கி, உயிர்களுக்கு இறவாத இன்பம் மருவும்படி முருகன் செய்தருள் கின்றான்.

## முருகனின் திருவுருவம் :

கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூவகை அவத்தை நிலைகளையும் போக்கி, முத்தான்மாக்க ளுடைய கூட்டத்தில் சேர்த்து, பெரியபரமுத்தி யைத்தந்து, அகப்பற்று புறப்பற்றுக்கள் அற்ற இடமே தனது திருவடியாகவும், ஞானமே உருவாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் சக்திகள் திருக்கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் நிற்கும் ஒப்பற்ற தனிச் சுடராகத் திகழ்பவன் முருகன். அவ னது திரு முன்னிலையில் எல்லா உயிர்களும் வேறுபாடின்றிச் சமமாக விளங்கும்.

நவமணிகளாலும் பசும் பொன்னாலும் செய்யப்பெற்று மின்னல் போன்று ஒளிவிடு கின்ற திருமுடிகளும்; ஆறு பிறைகளை வரிசை யாக வைத்தாற்போன்ற நெற்றிப் பொட்டழ கும்; தாமரை மலர் போன்ற அழகிய பன்னி ரண்டு விழிகளும்; பல சூரியர்கள் ஒருங்கே ஒளிவீசினாற்போல விளங்கும் மகரக் குழை களும்; புன்முறுவல் தவழும் உதடுகளும்; பிறவி வெப்பம் தீர்க்கும் இன் சொல்லும் உடையவன் முருகப் பெருமான்.

## ஆறுமுகங்கள் :

அவனுடைய ஆறு திருமுகங்களில் சூர பதுமனைத் தடிந்து பகைவர்களின் உயிரைப் போக்கி, அழியாத பேரின்ப வாழ்வைத் தருவது, ஒரு திருமுகம்; உயிர்களுக்கெல் லாம் அவற்றின் பிராரத்த கன்மத்தைப் போக்கி, அழியாத பேரின்ப வாழ்வை அளிப் பது ஒரு திருமுகம்; வேதாகமங்கள் பலவற் றையும் ஐயமின்றி முற்றுப்பெறச் செய்வது ஒரு திருமுகம்; உயிர்களின் மல இருளைப் போக்கிக் கோடி சூரியர்களைப்போல ஒளி வீசுவது ஒரு திருமுகம்: நேசமுடன் போகம் நுகரும் வள்ளி தெய்வயானை அம்மையர்கட்கு மோகம் தருவது ஒரு திருமுகம்; அருள் வேட்கை யோடு திருவடியைச் சார்ந்தாரைக் காப்பது ஒரு திருமுகம். இங்ஙனம் ஆறு திருமுகங் களும் கொண்டு விளங்குபவன் முருகன்.

## பன்னிருகைகள் :

தேன் சொட்டும் கடப்ப மலர்மாலையையும், மணம் மிக்க குரவ மலர் மாலையையும் அணிந்த பன்னிரண்டு தோள்களையுடையவன் முருகன். அவற்றுள் தேவர்களுக்கு அமிர் தத்தை அளிப்பது ஒன்று. தேவ மகளிரைத் தழுவி அணைப்பது ஒன்று, மழை பொழியச் செய்து உலக உயிர்களைக் காப்பது ஒன்று, பூமாலைகள் நெருங்க அணிந்திருப்பது ஒன்று; அடியவர்களை அஞ்சேல் என்று கூறித் தன் மார் பிலே வைத்தது ஒன்று: இடுப்பின் இடப்பக்கத் தில்வைத்திருப்பது ஒன்று; தொடையிற் சார்த் தியது ஒன்று, வீரவளையணிந்தது ஒன்று; மணி சேர்ந்தது ஒன்று; போரில் அங்குசம் பிடிப்பது ஒன்று; கேடயம் சுழற்றுவது ஒன்று; வாளேந்துவது ஒன்று. இத்தகைய பன்னி ரண்டு திருக்கைகளை உடையவன் முருகன்.


## தெய்வ விளக்கு :

குடம் போன்ற தனங்களும், சிவந்த இதழ்களும், கொடி போன்ற மெல்லிய இடையும் உடைய, வள்ளி தெய்வயானை என் னும் இருவரும் விரும்பித் தழுவும் அகன்ற மார்பும், பூப்போன்ற அழகிய பட்டாடையும், பொன்னாலமைந்த அரை ஞாணும், அழகிய கச்சையும். திரு அரையும், நாத தத்துவமாகிய வீரக் கழலும், பொற்கிண்கிணியும், பாதங் களில் அணிந்த சிலம்பும், ஒரு நூறாயிரம் உதய சூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவமும், ஆகியவற்றை அகக் கண்ணால் கண்டு அன்பு செய்து வழிபடுவோர்க்கு ஆருயிராய், அவர் களின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் தெய் வீக விளக்கொளியைப் போன்றவன் முருகன்,

அகரம் உகரம் மகரம் நாதம் விந்து எனப் பெறும் ஐவகை ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழில்களை நடத்தும் பேருருவாய் நிற்பவன் முருகன். அவனுக்கு மந்திரமே இரத்தம்; பதமே மாமுடி;



தஞ்சை மாவட்டம், சீர்காழிவட்டம், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ சட்டைநாத சுவாமிகோயல் திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபக் கட்டிடத்திற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு. கே.** வி. சுப்பையா, **B. A.** அவர்கள், அடிக்கல் நாட்டியபோது வரவேற்கப் பெறுதல் ( *1—3—70* )



தருமையாதீனம், சீர்காழிச் சட்டைநாத சுவாமி கோயில், திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா B. A. அவர்கள் வருகை தந்தபோது, வரவேற்கப் படுதல் (1-3-70)

வன்னமே தோல், புவனமே உரோமம், தத்துவமே ஏழு தாதுக்கள், கலையே உறுப்புக்கள், இங்ஙனம் ஆறு அத்துவாக்களின் வடிவமாய்க் காட்சி யளிப்பவன் முருகன்.

பலகோடி அண்டங்கள் உருவமாகவும், சராசரங்கள் உறுப்புக்களாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சக்திகள் அகக் கருவிகளாகவும் கொண்டு, வழிபடும் அன்பர்களுக்குச் சூக்கும ஐந்தொழில்களை ஏவி நடத்துபவன் முருகன். அவன் நிலம் நீர் தீ வளி விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் அட்டமூர்த்தம் கொண்டு விளங்குகின்ருன், இமயம் நியமம் ஆசனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டுப் பகுதிகளையுடைய அட்டாங்க யோகத்தின் முடிவில், ஞானத்தை அளிக்கும் பயனுக இருப்பவன் முருகன்.

## தசாங்கங்கள்

அன்பர்கள் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற ஆனந்தமாகிய மலை; பேரின்ப வெள்ளமாகிய ஆறு; இன்பம் தரும் மேலுலகமாகிய நாடு: போக்குவரவு இல்லாத உயர்ந்த அழகிய நகரம்; ஐந்தெழுத்து ஓதிச் செலுத்தும் குதிரை; மதம் தோய்ந்து களித்துத் துதிக்கையினுல் ஐந்து மலங்களையும் காய்ந்த சிவஞானமாகிய யானை; அறிவும் அன்பும் கொண்டு தொடுத்த மலர் மாலை; ஐந்தொழில் நடத்தும் உயர்ந்தகொடி; நவநாதமாகிய முரசு; புவனங்களை ஆக்கி இயக்கும் ஆணை, ஆகிய தசாங்கங்கள் கொண்டவன் முருகன்.

(என்று இதுகாறும் முருகனின் அருமை பெருமைகளை விளக்கும் முறையில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் கந்தர் கலிவெண்பாவில் சந்தமுற நன்கினிது சுருங்கக் கூறி விளக்கப் பெற்றன. (கண்ணிகள் 1 முதல் 74 வரை). இனி, கண்ணிகள் 75 முதல் 108 வரையில் கந்தபுராண வரலாறுகள் கவின் மிகச் சுருக்கித் தொகுத்துக் கூறப்படுகின்றன,)

## கந்தபுராணச் சுருக்கம் :

கயிலாய மலையில் உமாதேவியுடன் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். ஒருநாள், அசுரர்களின் கொடுமையைத் தாங்காத தேவர்கள்; சிவபெருமானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சிவபிரான் அவர்களின்முறையீட்டைக்கேட்டுத் திருவுள்ளம் இரங்குகின்ருன், தனக்கு இயல்பாக உரிய ஈசானம் தத்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களுடன், கீழ்நோக்கிய அதோமுகம் என்னும் முகத்தையும் கொண்டு ஆறுமுகங்கள் உடையவனுய்; ஆறு நெற்றிக் கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளை வெளியே விடுத்தான், அவைகள் எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன! அதனுல் சிவபிரான் அவற்றைத் திருக்கையால் எடுத்து வாயுதேவனிடம் தந்தான். அவன் அதனைத் தாங்கலாற்ருமல் அக்கினி பகவானிடம் அளித்தான். அவனும் அதைத் தாங்க முடியாமல் குளிர்ந்த கங்கை யாற்றில் விட்டான். கங்கையும் தாங்க முடியாமல், தனது மடியில் தாங்கிக் கரையிலுள்ள சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்கள் ஆகிய அறுவரின் முலைப்பால் குடித்து விளையாடின. சிவபிரான் அக்குழந்தைகளை உமாதேவியாருக்குக் காட்டினுன். தேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்ருகச் சேர்த்து எடுத்து அணைத்தாள். அதனுல் அவைகள் ஒருருவம் ஆயின. அது கண்டு மகிழ்ந்து கந்தன் எனப் பெயரிட்டு முகத்தில் அணைத்து உச்சி மோந்து திருமுலைப் பால் ஊட்டி, உமாதேவியார் சிவபிரான் இடத்தில் அக்குழந்தையை யளித்தாள்.

உமாதேவியாரின் சிலம்பிலிருந்து சிதறிய நவமணிகளினின்று, மாணிக்கவல்லி, முத்துவல்லி. புஷ்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி என்னும் நவசக்திகள் தோன்றினர். அவர்கள் சிவபிரானை விருப்புடன் நோக்கிக் கருக் கொண்டனர். அதனுல் அவர்களிடமிருந்து, வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர். வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் நவ வீரர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய வீரவாகுவை அழைத்து, நாரத முனிவர் செய்த வேள்வியில் தோன்றி, உலகத்தை யழித்து

உலவிவரும் ஆட்டுக்கிடாயைக் கொண்டு வருக என்று முருகன் கட்டளையிட்டான். அங்ஙனமே வீரவாகு அதனைப் பிடித்துக் கொணர்ந்து விடுக்க, அதனை முருகன் எட்டுத் திக்குக்களிலும் செலுத்தி விளையாடினன்.

ஒருகால் பிரமன் கைலைக்குச் சென்றபோது அகந்தையால் முருகனை வணங்காது சென்றான். முருகன் அவனை அதட்டி அழைத்து, நீ யார்? நீ செய்யும் தொழில் யாது? என வினவினன். அதற்கு அவன் 'நான் பிரமதேவன், நான் செய்வது படைப்புத் தொழில்' என்றான். 'படைப்புத் தொழிலை நீ எவ்வாறு செய் கின்றனை' என முருகன் வினவ, வேதங்களை ஓதிச் செய்கின்றேன் என்றான் பிரமன். 'வேதங்களை ஓதிக் காட்டு' என முருகன் பணித் தான், பிரமன் வேதத்தை ஓதத்தலைப்பட்டு, முதலில் 'ஓம்' என்று கூறித் தொடங்கினன். முருகன் உடனே அவனை நிறுத்தி, 'நீ இப்போது ஓதிய ஓம் என்பதன் பொருளைக் கூறுக' எனப் பணித்தான். அவன் தெரியாது விழித்தான். 'இதுதானும் அறியாத நினக்கு இத்துணைச் செருக்கா? நீ படைப்புத்தொழிலைச் செய்யும் தன்மை யாங்ஙனம்?' எனக் கடிந் துரைத்து, அவனைத் தலையிற் குட்டிச் சிறையில் இடுவித்தான்.

பிரமன் சிறைப்பட்டதனால் வருந்திய திரு மால், சிவபிரானிடம் சென்று முறையிட்டார். சிவபிரான் நந்திதேவரை முருகன்பால் உய்த்துப் பிரமனைச் சிறையினின்று விடுவிக்கப்பணித்தார். முருகன் அதற்கு இசைந்திலன். சிவபிரான் நேரே போந்து முருகனைக் கண்டார். முருகன் சிவபிரானைப் பணிந்து, பிரமன் பிரணவப் பொருள் அறியாமையினால் சிறைப்பட்டதனைக் கூறினர். சிவபிரான், அற்றேல் பிரணவத்தின் பொருளை நீ எனக்குக் கூறவல்லையோ? என்றார். முறைப்படி இருந்து கேட்பின் உரைப்பேன் என்று முருகன் மொழிந்தருளினன். சிவ பிரானும் அதற்கு இசைய, முருகப்பெருமான் சிவனார் மனங்குளிர, உபதேச மந்திரம் இரு செவி மீதிலும் பகர்தல் செய்தான்.

தேவர்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்காக முருகன் தாரகாசுரனை அழித்தான். அவனுக்குத் துணையாகப் போந்து மலையாக நின்ற கிரவுஞ் சன் என்னும் அசுரனையும், வீரவடிவேல் விடுத்து ஒழித்தான். கடல் அலை வீசும் திருச் செந்தூரில், கருணை வெள்ளம்போல உயர்ந்த பீடத்தில் வீற்றிருந்து, தேவேந்திரனுக்குத் தஞ்சமளித்தான். சூரபதுமனிடம் நல்லுரைகள் கூறிவரும்படி வீரவாகுவைத் தூதுவிடுத்தான். ஆனாலும் சூரபதுமன் தேவர்களைச் சிறைவிட மறுத்தமையால், தேர் யானை புரவி காலாள் என்னும் நான்கு வகையான படைகளையும் கொண்டு சென்று, பானுகோபன், சிங்கமுகன் முதலிய அசுரர்களை வதைத்து, வெற்றிமாலை யணிந்தான். அதுகண்டு ஒளிந்த சூரனை இரண்டு கூறுகளாகப் பிளந்தான். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றொன்று கோழியாகவும் வடிவெடுத்து நின்றது. முருகன் மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் ஏற்றுக்கொண்டான்.

இவ்வாறு சூரபதுமனைத் தடிந்ததனால், முருகன் மும்மூர்த்திகளின் குறைகளைப் போக்கினன். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தான். முருகன் அருளால் தேவர்கள் மகிழ்ந்தார்கள். தேவேந்திரன் தனக்கும் தேவர்களுக்கும் நலம் செய்த முருகனுக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த விரும்பினன். அதனால் தன் மகளாகிய தெய்வயானை யம்மையை முருகனுக்கு மணம் செய்துதர விரும்பி, ஏற்றுக்கொண்டருளுமாறு முருகனைப் பணிந்து வேண்டிக்கொண்டான். அவனது வேண்டுகோளுக்கிசைந்து, தெய்வயானையம் மையை முருகன் திருப்பரங்குன்றத்தில் மணம் புரிந்துகொண்டு மகிழ்வித்தான்.

திருமாலின் புதல்வியராகிய அமுதவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும், முருகனை மணக்க விரும்பித் தவம் புரிந்தனர். முருகன் பணித்தபடி அமுதவல்லி விண்ணுலகத்தில் தெய்வயானையாகத் தோன்றி முருகனை மணந் தனள். மற்றொருத்தியாகிய சுந்தரவல்லி மண் ணுலகில் சிவமுனிவர் என்பவரின் அருட்பார் வையால் மானொன்றின் வயிற்றில் கருவுற்று, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் தோன்றி, வள்ளி எனப் பெயரிடப்பெற்று, நம்பிராசன் என்னும் வேடர் தலைவனால் எடுத்து வளர்க்கப் பட்டு வந்தாள். தமிழ் நூல்கள் கூறும் கற்பு களவு என்னும் இருவகைத் திருமண முறை களுள், கற்பு மணத்திற்குரிய எடுத்துக்காட்

டாகத் தெய்வயானை அம்மையை மணந்த முருகன், களவு மணத்திற்கு இலக்கியமாகப் பலவகைத் திருவிளையாடல்களை நிகழ்த்தி வள்ளியம்மையை மணந்து கொண்டான்.

[இவையனைத்தும் கந்தபுராணம் கூறும் முருகனின் விரிவான வரலாற்றின் சுருக்கம். சுருங்கிய சில வரிகளில் கந்தபுராண வரலாறு முழுதினையும் முறைப்படத் தொகுத்து ஒருங்கே தொடுத்து இனிது பாடியருளியகுமரகுருபரரின் கவிதைக் கலைநலமும், பக்தியுணர்வின் சிறப்பும் பெரிதும் மிகப் பாராட்டுதற்குரியனவாகும்.]

## பிரார்த்தனை :

திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திரு வாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்சோலை என்னும் ஆறு படைவீட்டுத் தலங்களையும் தரிசித்து, ஆறு எழுத்து மந்திரத்தைச் செபித்து, வழிபடும் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளிக் குடிகொள்ளும் முருகனே! திருச்சீரலைவாய் ஆகிய திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து, எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் பாதுகாத்து அருள் புரியும் செவ்வேளே!

எண்ணில்லாத தொன்னெடுங் காலமாக அடைந்து வருகின்ற பிறவித் துன்பமும், காலமின்றி எதிர்பாராமல் நேரும் இறப்புத் துன்பமும், பலகோடி இடையூறுகளும், பல வகையான நோய்களும், பலவகையான பாவங்களும், பில்லி சூனியம் போன்ற ஏவல் வினைகளும், பாம்பு பிசாசு கொடிய பூதம், பெரிய தீ, நீர்வெள்ளம், தீங்குவிளைவிக்கப் பகைவர்கள் விடும் படைக் கலங்கள், தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சு, கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும், அவை எப்போது வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில் அப்போதே நின்னுடைய பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோள்களும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சை கட்டிய திரு அரையும், சிறிய மெல்லிய திருவடியும், அஞ்சேல் என்னும் திருக்கையும், அருள் பொழியும் பன்னிரண்டு திருவிழிகளும், ஒளிவீசுகின்ற அழகிய ஆறு திருமுடிகளும், எல்லாத் திசைகளிலும் எதிரே தோன்ற வெளிப்பட்டு, இடுக்கண்களையெல்லாம் பொடியாகச் செய்து, எல்லா வரங்களையும் தந்து, நீ எங்கள் உள்ளத்தில் புகுந்து உல்லாசமாகக் குடியிருத்தல் வேண்டும்!

எங்களுக்கு ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் திறமையையும், அட்டாவதானம் என்னும் அருஞ் செயல் புரியும் ஆற்றலையும், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறுக அமைந்த பற்பல காவியங்களின் பயிற்சியையும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணத்திலும் தேர்ச்சி நிரம்பிப் பழுத்த தமிழ்ப் புலமையையும் சிறப்புறக் கொடுத்தருள்க! இப்பிறவியிலுள்ள அகப்பற்று புறப்பற்றுகளாகிய இரண்டு வேதனைகளையும் அகற்றி, ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி; பசுபோதம் நீங்கி, ஒழுக்கம் வாய்ந்து, திருவருளின் சிறப்பை ஆராய்ந்து இன்புறுவதையே பொழுது போக்காகக் கொண்டுள்ள சிறந்த பழைய அடியார்களுடன் கூடும்படிசெய்து, பேரின்பத்தை நிறைய நுகரச் செய்து, மணம் பொருந்திய சிவந்த தாமரை மலர்போன்ற நின் திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டு, அடியேங்களுக்கு முன்னின்று அருள்புரிவாயாக!

## முடிவுரை :

இங்ஙனம் பற்பல நலங்களும், அற்புதக் கவிதைச் சிறப்பும் அமைந்து, பக்தி யுணர்வை வளர்ப்பதற்குரிய பாராயணப் பனுவலாக விளங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் கவின் மிகு நூலை, நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகன் திருவருள் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

# பெரியவாச்சான் பிள்ளை வைபவம்

[ மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம். ]

ஆவணி மாதத்து ரோகிணி நட்சத்திரத்தில் பூர்வசிகி சந்ததியில் திருவவதரித்தவர் பெரிய வாச்சான்பிள்ளை. இவ்வாசிரியருடைய சரித்திர வரலாறுகளைப் பற்றியும் விசேஷமாக அறியப் பெறுகின்றிலோம். இவர் தம்மால் உலகுக்கு விளைந்த மகோபகாரம் அபரிமிதமாதலால், அதைப்பற்றியே சிறிது ஆராய்ந்து உகப்போம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு எல்லாம் மிகச் சிறந்த வியாக்கியானமும், ஸ்ரீ ராமாயணத்தில் பல பல சுலோகங்களுக்கு இன் சுவையே வடிவெடுத்த வியாக்கியானமும், ஸ்தோத்திர ரத்நாதி வியாக்கியானங்களும், இவர் அருளிச் செய்தவை. இவைகள் இவருடைய அப்ரதிமமான பாண்டித்தியத்தையும் அப்ரமேயமான மேதாப்ரதிபா விலாசத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. வடக்குத் திருவீதிப் பிள்ளையும் இவரும், நம்பிள்ளை திருவடிகளில் ஸப்பிரம்மசாரிகளாக வாழ்ந்து, சகலார்த்தங்களையும் சம்சய விபர்யயமறக் கற்றவர்கள், நம்பிள்ளை சகல சாஸ்திரங்களையும் வரியடைவே அதிகரித்து, அந்தப் பாண்டித்தியம் முழுவதையும், அருளிச் செயற்றொருளுரைக்கும் உபன்யாசங்களிலே உபயோகப் படுத்திவந்தார் என்பது பிரசித்தம். அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் சகல சாஸ்த்திரங்களிலும் மிக்க தேர்ச்சியடைந்து, தமது ஞான விளக்கத்தை வியாக்கியானங்கள் அருளிச் செய்வதில், வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மகோபகாரகர்களில் தலைமைஸ்தானம் பெற்று அருளினர்.

மதாந்தரஸ்தர்களில் பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் வேத பாஷ்யங்களை விபுலமாக எழுதிப் புகழ்பெற்றவர்களே. ஆனாலும் அந்த வேத பாஷ்யங்களானவை, பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானங்களின் முன்னிலையில் பகல் விளக்கும் மின்மினியுமாயிருக்கும், அந்த வேத பாஷ்யங்கள் சுமை சுமையாக இருந்தாலும் இன்னது சொல்லிற்று என்று ஒருவர்க்கும் அறியப் போகாது. மூலத்தில் ரசமிருந்தாலன்றோ பாஷ்யத்தில் ரசங்காண முடியும். காடு பரந்த கர்ம காண்டங்கள் கர்ம நிஷ்ணுதர்களுக்கும் உபயோகமற்றவையாயுள்ளன, அங்கே பகவத்குண பிரசம்சை என்பது ஓரிடத்திலும் அணுமாத்திரமும் காண முடியாதது. பகவத்குண ரசிகர்களுக்கு அவை கொண்டு பயனொன்றுமில்லையே. அப்படியன்றிக்கே திராவிட வேத பாஷ்யகாரரான பெரிய வாச்சான் பிள்ளையின் ஸ்ரீ சூக்தி ஒவ்வொன்றும் பகவத் குணாநுபவத்தால் அல்லாது போது போக்கு அறியாத முமுட்சுக்களுக்கு ரசாயனமாய் இருக்கும். பகவத் விஷயத்தில் சேராமல் பாஷ்ய விஷயங்களைப்பற்றிப் பேசினாலுங்கூட, பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம், மிக மிக அதிசயிக்கத்தக்கதாக இருக்கும். ஒன்றே இங்கு எடுத்துக் காட்டுவோம்.

பெரிய திருமொழியில் திருநறையூர் விஷயமான பாசுரங்களுள் (6-7-4) ''மென்மலர் மேற் களியாவண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற, நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர்'' என்பது ஒரு பாசுரம். இது சாதாரணமாகச் சோலைகளில் நடக்கும் செய்தியைச் சொல்லுவது. வண்டுகள் மதுபானம் பண்ணுவதும், தென்றல் காற்று தூற்றுவதும், முல்லை

வாய் திறப்பதுமான சம்பவம் சொல்லியிருக்கின்ற இது சுவபாவோக்தி. ஆனாலும் இங்குச் சொற்சேர்க்கை அமைந்த அழகை நோக்கிப் பெரிய வாச்சான் பிள்ளை தமது வியாக்கியானத்தில் அருளிச் செய்திருப்பதாவது. ''(மென் மலர் மேலித்யாதி.) கண்டவிடமெங்கும் பரப்பு மாறப் பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபானார்த்தமாகக் கிட்டின வண்டுகள் அத்தைக் கிட்டப்பெற்ற அர்ஷத்தாலே களித்து, நிஷித்த சேவை பண்ணுவாரைப் போலே மது பானத்தைப் பண்ணிற்றின. அதைக் கண்ட தென்றல் நாட்டிலே பழியைத் தூற்றிற்று. அதைக் கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத்தை அனுசந்தித்து ''அதுதான் அப்படி செய்கிறது. இதுதான் இப்படி செய்யக் கடவதோவென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் ஸ்மிதம் பண்ணிற்று'' என்று!

இதனை நாமே விவரிப்போம்: வண்டு கள்ளுண்பதாகவும், தென்றல் அலர் தூற்றினதாகவும், முல்லை முறுவலித்ததாகவும் மூலத்தில் உள்ளது. 'அலர் தூற்றுதல்' என்னும் சொல்லுக்குப் புஷ்பங்களைத் தூற்றுதல் என்கிற பொருளேயல்லாமல், பழி தூற்றுதல் என்கிற பொருளும் உண்டாதலால், அதைக் கொண்டு ரசோக்தியாக இங்கு மிக அழகிய வியாக்கியானம் செய்தருளுகிறபடி. வண்டு என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய்; அவன் ஏதோ விதிவசத்தால் கள்ளுண்ண நேர்ந்து விட்டதாம்: அதைக் கண்ட ஒருவன், கள்ளுண்டான் கள்ளுண்டான் என்று நாட்டிலே பழி தூற்றப் புறப்பட்டானும்; இவ்விரண்டையும் கண்ட ஒரு சுத்த சாத்விகன் 'ஏதோ விதி வசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ண நேர்ந்து விட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழி தூற்றவேணுமோ? இவ்விருள் தருமா ஞாலத்தில் இது சகசந்தானே என்று வாளா இருக்கலாகாதோ என்று, வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் இவையென்ன உலகியற்கை என்று புன்சிரிப்புச் செய்கிறானும். எப்படிப் பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்த காரியம் செய்ய நேர்ந்து விடுவது சகஜம் என்றும், அதைப்பற்றி ஒருவன் பழி தூற்ற நேருவதும் சகஜம் என்றும், 'இதுவொரு பிரமாதமா? இதைப் பழி தூற்ற வேணுமா?' என்று சில மகான்கள் நினைப்பதும் உண்டென்றும், லௌகிக சந்நிவேசம் உணர்த்தியதாக வியாக்கியானங் கண்டது விலட்சண மேதா விலாசம். இஃது ஓர் எடுத்துக் காட்டாக ஈண்டு அமைக்கப்பட்டது. அத்யாத்ம சாத்திரார்த்தங்கள் அபரிமிதமாகக் காண்பதோடு, இத்தகைய லௌகிக வாக்கின் வின்யாசங்களும்விபுலமாகக் காணப்படும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானங்களில்.

திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் இட்டு அருளும் திருப்பணியில் மற்றும் சில ஆச்சார்யர்களும் கைவைத்தது உண்டு. ஆனால் பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்கியானமிட்டு அருளினவரென்னும் பெருமை இவ்வாசிரியர் ஒருவர்க்கே அசாதாரணமாக அமைந்ததாகும். இவ் விஷயம் உபதேச ரத்தின மாலையில் ''பிள்ளான் நஞ்சீயர் பெரிய வாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாள யோகி திருவாய் மொழியைக் காத்த, குணவாளர் என்று நெஞ்சே கூறு''—''நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நால் இரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்கும் இல்லையே—தஞ்சீரால் வைய குருவின் தம்பி மன்னுமணவாள முனி, செய்யுமவை தாமுஞ்சில''...''பெரிய வாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்குந்தெரிய, வியாக்கியைகள் செய்வால் அரிய அருளிச் செயல் பொருளை ஆரியர் கட்கிப் போது, அருளிச் செயலாய்த்து அறிந்து'' என்ற பாசுரங்களினாலும் உணரத்தக்கது.

பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர் தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்த தென்றும், மணவாள மா முனிகள் பலருடைய பிரார்த்தனைக்கு இணங்கி அக்குறையைத் தாம் நீக்கி அருளினர் என்றும், சம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

கடல் ரத்நாகரம் என்று பெயர் பெற்றிருத்தல் போல, இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்த ரத்னநிதியாகப் புகழ் பெற்றுள்ளதாதலால், அதனை அனுபவிப்பதே இவ்வாசார்யருடைய பெருமை அனுபவம் ஆகும்.

# இந்து மதத்தின் சிறப்பு*

ந. ரா. முருகவேள், M. A., M.O. L.

## முன்னுரை :

உலகில் நிலவி வரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது, நமது இந்து மதம். பிற சில மதங் களைப் போல நமது இந்து மதமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. யூத மதம் (கி.மு. 1500—1200), ஷிண்டோ மதம் (கி.மு. 660), சொராஸ்ட்ர மதம் (கி. மு. 660), டாவோ யிஸ்ம் (கி. மு. 604), சமணம் (கி. மு. 599), பௌத்தம் (கி. மு. 560), கன்பூசியம் (551). கிறித்தவம் (4 கி. பி.), இஸ்லாமியம் (570 கி. பி.), சீக்கியம் (1469 கி. பி.) என்னும், மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னு ரால் தோற்றுவிக்கப்பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக் காண்கின்றோம்.

அவ்வாறு ஏதும் கூறற்கு இயலாத நிலையில் வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக நமது இந்து மதம் விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினிசியா. சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில் முன்னொரு காலத்தில் விளங்கியிருந்த, எத்த னையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரி யாமல் மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்துமதம் தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர **திலகர்;** பேராசிரியர் எர்மன் **ஜேகோபி** ஆகிய பெரு மக்கள், வானநூற்குறிப்புக்கள் பல கொண்டு **கணித்து,** வேதகாலம் கி. மு. 4500-க்கு முற் பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்துமதத்தின்பழைமை எத்தகையது என்று, யாவரும் இனிதுணரலாம். இத்தகைய சிறந்த தொன்மையுடைமை பற்றியே, இந்து மதத்தினைச் ''சநாதன தருமம்'' (Perennial Religion) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

## சொற்பொருள் :

'இந்து மதம்' என்னும் சொல், நமது பழைய வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் முதலிய நூல்கள் எதிலும் காணப்படவில்லை என்றும், அஃது அண்மையிற் சில காலமாகவே வழங்கி வருகின்ற வேற்றுப்புலச் சொல் என்றும் ஒரு சிலர் கூறுவது உண்டு. அஃது ஒரு வகை யில் உண்மையே யாகுமாயினும், அதுபற்றி ஏதும் குறையில்லை.

> "தொன்மையவாம் எனும் எவையும்
> நன்றாகா; இன்று
> தோன்றியன எனும் எவையும்
> தீதாகா"

என நம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர் களுள் ஒருவர் ஆகிய **உமாபதிசிவம்** கூறுவது, ஈண்டு நாம் எண்ணியுணர்தற்கு உரியது.

> ''கடிசொல் இல்லைக்
> காலத்துப் படினே''

என ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய் திருத்தலும், இங்கு நாம் பெரிதும் சிந்திக்கத்

---

* கன்னியாகுமரி மாவட்டம், **'மந்தைக்காடு'** என்னும் இடத்தில் நடைபெற்ற 34ஆம் ஆண்டு இந்து சமய மாநாட்டில், கோட்டயம் தவத்திரு. சுவாமி ஆதுரதாஸ்ஜி மகராஜ் அவர்கள் தலைமையில், ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (9-3-70). —ஆசிரியர்

தகுவதாகும். இச்சொல் அண்மையது ஆயினும் அது குறிக்கும் பொருள் மிக்க தொன்மை யுடையதேயாகும் என்பதில் ஐயமில்லை.

## பொருள் விளக்கம் :

(1) ஒரு சொல்லின் பொருளை விளக்கு தலில் பொதுவாக இருவகை முறைகள் உண்டு. அவைகளை முறையே உண்மை கூறல், பொருந் தக்கூறல் எனலாம். பாரசிகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டார், சிந்து நதியையும் அதனைச் சார்ந்த நிலப் பகுதியையும் (Indus, India, Hindu), இந்து என்று வழங்கி வந்தனர். அதுவே பின்னர்ப் பாரத தேசம் முழுமைக்கும் அதன்கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும் அவர்களின் பழக்கவழக்கம் பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கும் நாளடைவில் வழங்குவதா யிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இன்று இந்தியா என வழங்கப்படும் நம் பாரத நாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச்சொல் அண்மைக் காலத்தி லேயே பெருவழக்குப் பெற்றது எனினும், இதனால் குறிக்கப்படும் சமய நெறி தொன்மை வாய்ந்ததாகும் (The name is recent, but the thing is ancient). இது உண்மை கூறல் என் னும் உத்தியாகிய நூல் வழக்காறு.

(2) இனி, பொருந்தக் கூறல் என்னும் உத்தி வகையினால், இந்து என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல புதிய பொருள் விளக்கங்களை யும் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்ந்து கூறுவதுண்டு. அம்முறையில் பின் வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

இந்து என்னும் சொல் நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப்பெறவில்லை. ஆயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் புத்தம் வேதாந்தம் சித்தாந் தம் முதலிய பல்வேறு சமய நெறிகளையும் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுவதற்குரிய ஒரு தொகுதிப் பெயராக (Colletive noun) இந்து மதம் என்னும் சொல் பெருவழக்காக நிலவி வருகின்றது. ஆதலின் பொருந்தக் கூறல் என்னும் உத்தி பற்றி, அறி ஞர்கள் இந்து மதம் என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கங்கள் கூறுவர்.

> "ஹிம்ஸாயாம் தூ யதே யः ஸः ஹிந்து
> இத்யபி தீயதே"

என்றபடி, (ஹிம்-ஹிம்சையில், து-துக்கிக்கிற வன்; ஹிந்து) "ஓர் உயிர் எந்தக் காரணத்தினு லாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன் பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணி புரிகின் றானோ, அவனே இந்து ஆவான்; அவனது சமயமே இந்து மதம்" என்று அறிஞர்கள் சிலர் இதற்குப் பொருள் கூறுவர்

(3) இனி, மற்றும் சில அறிஞர்கள் இதற்கு வேறொரு பொருளும் கூறுவர். 'சப்த கல்பதரு' என்னும் புகழ் பெற்ற வட மொழி இலக்கண நூல், 'ஹேயம் நிந்தாதி இதி ஹிந்து' எனக் கூறுகின்றது. "நினைவிலும் சொல்லிலும் செயலிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்தாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனோ, அவனே இந்து; அவனு டைய மதமே இந்து மதம்" என்பது மற்றொரு வகை விளக்கம்.

இவ்விருவகைப் பொருள்களும், இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோளை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன. ஆதலின் இப்பொருள் விளக் கங்கள் நாம் பெரிதும் போற்றிப் பாராட்டு வதற்குரியனவாகும்.

"இந்து மதத்தின் மூலமாகவே தெளிவும் இன்பமும் அமைதியும் அடைய முயலுதலைத் தவிர, இவ்வுலகில் எனக்கு வேறு பிறிதொரு விருப்பமும் இல்லை" எனக் காந்தியடிகள் கூறி யருளியுள்ளார் என்பது இங்கு நாம் அறிந்து இன்புறத்தக்கது. அன்னிபெசன்ட் அம்மையார், ஆல்டஸ் அக்ஸ்லி போன்ற எத்தனையோ பல அயல் நாட்டுப் பேரறிஞர்கள், இந்து மதத்தை யும் அதன் உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளை யும் வியந்து போற்றிப் பாராட்டியுள்ளனர் என் பதும், நாம் பெரிதும் சிந்தித்து மகிழ்தற் குரியது.

## பொதுமை நலம் :

நமது இந்தியப் பெரு நாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கின்றோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே, ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்தல் காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக் கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும் பற்பல துறைகளில், மிகவும் வியக்கத் தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராக இருக்கின்றனர். கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை பிறப்பு இறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கையிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக் காண்கின்றோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெரு நாட்டில் விளங்கி வழங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக் கொண்டு விளங்கி வரும் சிறந்த பொதுமைப் பெரு நெறியே, இந்து மதம் ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

## பெருமை :

இந்து மதமானது, ஒருவகையில், ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னை புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியினதாய்'' பெருமையுற்றுப் பிறங்கி வருகின்றது. உலகின் பல பகுதிகளில் இந்து மதம் பண்டும் பரவியிருந்தது; இன்றும் பரவியிருந்து வருகின்றது. சமணமும் பௌத்தமும் சீக்கியமும் போன்ற மதங்கள் இந்து மதத்தினின்று தோன்றிய கிளை மதங்களே யாகும். எத்தனையோ கோடிக்கணக்கான மக்களுக்குரிய மதமாக இந்து மதம் இலங்குகின்றது. இந்து மதத்தை எதிர்த்துப் பல இயக்கங்களும் கொள்கைகளும் அவ்வப்போது தோன்றின. எனினும், அவற்றை யெல்லாம் வென்று புறங்கண்டு, இன்றும் உயிர்ப்பாற்றலுடன் இந்துமதம் நின்று நிலவி வருகின்றது. உலகப் புகழ் பெற்றவர்களாகிய **விவேகானந்தர், அரவிந்தர், இரவீந்திரநாத தாகூர், காந்தியடிகள்** போன்ற பல பெருஞ் சான்றோர்கள் இந்துமதத்தினைப் பெரிதும் விரும்பிப் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

## சிறப்பு :

தமிழ்நாட்டில் தோன்றிய தத்துவ ஞானிகளில் தலைசிறந்த ஒருவரும், சிவஞான சித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவப்பெருநூலை இயற்றியருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்கள், சிறந்த சமயம் எது? என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்: ''உலகத்திலுள்ள பல சமயங்களும், அவற்றிற்குரிய பல நூல்களும், தம்முள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மிகவும் மாறுபட்டனவாக உள்ளன. இவற்றுள் சிறந்த சமயம் யாது? சிறந்த பொருள் நூல் யாது? என்று நாம் ஆராய்ந்தால், எந்தச் சமயத்தையும் நூலையும் இகழாமலும், 'இதுவே பொருந்தும், அது பொருந்தாது' என்னும் பூசல்கள் இன்றியும், பல சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா உண்மைகளையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொண்டு, அவைகள் அனைத்திற்கும் பொதுவானதாய், ஒரு பெரும் நிலைக்களனைத் திகழும் சமயமும் நூலுமே, உண்மையிலேயே சிறந்த ஒரு பெரும் சமயமும் நூலும் ஆகும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

''ஓது சமயங்கள்
பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள் நூல்
யாது இங்கு? என்னில்
இதுஆகும், இது அல்லது
என்னும் பிணக்கது இன்றி,

நீதியினுல் இவையெல்லாம்
ஓர்இடத்தே காண
நின்றது யாதொரு சமயம்!
அதுசமயம்; பொருள் நூல்''

என அவர் சைவசித்தாந்தத்தின் சிறப்பைப் பற்றி விதந்து கூறியிருப்பது, இந்து சமயத்திற்கும் கூட, ஒருவகையிற்பெரிதும் ஏற்புடைத் தொன்றேயாகும் எனலாம்.

## மானியர் வில்லியம்ஸ் :

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற்புறுத்தும் முறையில், சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர் இந்து மதம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள் இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியன.

''இந்துமதம், எல்லாச் சமயங்களிலுமுள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனிதகுலத்திற்கும், மனிதஇயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்த விரிந்த பெருநோக்கினுல், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக் கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக, இந்து மதம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப் போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து மதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவ ஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்க வல்லதாக, இந்து மதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது''.(1)

## அன்னை வசந்தை :

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும் உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னுர்ட்ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களோடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக் கூடியதும் ஆகிய சிறந்த மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்ருேமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை

---

(1) "A Characteristic of Hinduism is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing arms and ever-widening fold.

And, in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

—Sir Monier Williams,

அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்குவிளங்கிக் கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்.''(2)

இந்து மதத்தின் பலதிறப் பெருஞ்சிறப்புக் களுள், அதன் தத்துவக் கொள்கைகளும் சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத்தக்கனவாகும். 'அறுவகைச் சமயங்கள்' என்னும் தொடர், தொன்று தொட்டு வழங்கி வருவது. சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ்வறுவகைச் சமயங் கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல் களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ளனர். எனினும், அறுவகைச் சமயங்கள் அல்லது **'ஷட் தரிசனங்கள்'** எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றைவிட மிகவும் பழைமைவாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி முறையே அக்கபாதர் கணாதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் முனிவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

**வில்லியம் ஜோன்ஸ் :**

மிகப் பழைய காலத்திலேயே, நம் இந்திய நாடானது **கிரேக்கர் உரோமர்** முதலிய மேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந்நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக் ''கொண்டும் கொடுத்தும்'' கலந்து உறவாடி மகிழ்ந்தன.

இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்து வியந்த **சர். வில்லியம் ஜோன்ஸ்** என்னும் பேரறிஞர், ''இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் ஐயோனிக் கொள்கையையும், மீமாம்சம் பிளேட்டோ வின் கொள்கையையும், சாங்கியம் இட்டாலிக் கொள்கையையும், யோக தத்துவம் ஸ்டாயிக் கொள்கையையும் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வாற்றால் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்ஸ்ஸையும், ஜைமினி சாக்ரடீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்'' என்று ஆராய்ந்து ஒப்பிட்டுக் கூறி மகிழ்கின்றார். **மாக்ஸ்முல்லர், பெரிடல் கீத், விண்டர்நிட்ஸ், கிரிபித், எட்வின் ஆர்னல்ட், வில்லியம்காரி, ஷோபனேர், ரோமன் ரோலண்ட்** முதலிய **நூற்றுக்கணக்கான** மேலைநாட்டு அறிஞர்கள் பலர், **இந்து மத நூல் களை ஆராய்ந்து வியந்து** போற்றிப் பதிப்பித் திருக்கின்றார்கள்.

**விக்டர் கசின் :**

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள் தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மை கள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படு கின்றன. அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவுநலனுடன் ஒருங்கு வைத்து ஆராயும் போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்''(3) என்று **விக்டர்கசின்** என்னும் பேரறிஞர் விளம்பு கின்றார்.

இங்ஙனமே மாக்ஸ்முல்லர் என்னும் பேரறி ஞரும், ''ஐரோப்பியர்கள் வெறும் **கிரேக்க,** உரோம, யூத தத்துவங்களை மட்டுமே, படித் தால் போதாது. நம்முடைய **அகவாழ்க்கை** நிறைவானதாகவும், பலநலம் பொதிந்ததாக

---

(2) "After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect; none so scientific, none so philosophical, and none so spiritual as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it; the more you try to understand it, the more deeply will you value it."

—Dr. Annie Besant.

(3) "When we read with attention, the poetical and philosopical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truth so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest philosophy"

—Victor Cousin.

வும், உலகளாவி விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமையவேண்டுமாயின், இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப் படுத்த வல்லதாக உளது''(4) என்று கூறுகின்றார். இவற்றினாலெல்லாம் இந்து மதத்தின் சிறப்பு இனிது புலனாதல் காணலாம்.

**உலகின் பல பகுதிகளில் :**

இந்து மதமும், அதன் பல்வகைப் பண்பு நலங்களும் உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன, சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத்தீபம்), பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய பலபகுதிகளிலும், இந்து மதத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில் தேவவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன் சஞ்சயன் கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தியன் முதலிய பல இந்து மதப்பெயர்கள் இன்றளவும் பெருக வழங்கப் பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள **போராபுதூர்** புத்தர்கோயிலும் (கி. பி. 750—850), கம்போடியாவில் உள்ள **அங்கோர்தாம்** என்னும் சிவபிரான் கோயிலும் (கி. பி. 802—860), **அங்கோர்வாட்** என்னும் திருமால் கோயிலும் (கி. பி. 1110—1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக் கலை சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன. கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒருபெருங் கோயில், திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண் **இராமாயணம்**, **மகாபாரதம்**, **அரிவம்சம்** என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக் காட்சிகள் செதுக்கப் பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின் தொடர்தல், வாலி சுக்ரீவப்போர், அசோக வனத்தில் சீதையின் சோகநிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப்பெரிய அளவில் செதுக்கப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

**ஈலியோடொரஸ் :**

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து, இந்துமதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி.மு. 2ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் **பெஸ்நகர்** என்னுமிடத்தில், **பிராமி** எழுத்துக்களில் நிறுவப்பட்டுள்ள கல்வெட்டுத்தூண் ஒன்றில், 'சுங்க வம்சத்து மன்னனாகிய **பகபத்ரன்** என்பவனின் அரசவைத் தூதுவனாக **அந்தால்கிதாஸ்** என்னும் கிரேக்க மன்னவனால் அனுப்பப் பெற்றவனும், **டியோன்** என்பவனின் புதல்வனும், தட்ச சீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணுபக்தனும் ஆகிய ஈலியோடொரஸ் என்பவனால், **பரவாசு தேவன்** எனப்படும் விஷ்ணுவுக்குரிய, புனிதம்மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப் பெற்றுள்ள, இத்தூணானது நிறுவப் பெற்றது ''(5) என்று காணப்படுகின்றது. இதனால் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிறநாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்புமிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

அண்மையில் உருசிய நாட்டில் நமது இந்து மதத்திற்குரிய இதிகாசங்களாகிய **இராமாயணம் பாரதம்** முதலிய நூல்கள் மொழிபெயர்த்துப் போற்றப்பட்டு வருகின்றன. பேரறிஞர் ஃபிலியோசா என்பவரால் ஃபிரெஞ்சு மொழியில்

---

(4) "If I were to ask myself from what literature, we here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans, and of one scemitic race the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner - life more perfect, more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life — again I should point to India."

—Max Muller.

பெரிய புராணம் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இன்னோரன்ன பற்பல செய்திகளால் இந்துமதம், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்ப் பிறங்கி வருதல் உணரலாம்.

**சமன்லால் :**

''திருமாலின் கூர்மாவதாரப் படிமையினைக் கொய்ராகுவாவிலும், ஆதிசேடனின் கோயிலை மெச்சிகோ நகரின் அருகிலும், வாமனன் விருத்திரன் ஆகியோர் படிமங்களை மெச்சிகோ நகரின் தேசீயக் காட்சிச் சாலையிலும், இன்றும் யாவரும் காணலாம்.

பெருவிய நாட்டுக் கவிதை நூல்களின் ஒவ்வொரு பக்கத்திலும் இராமாயணம் மகா பாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப்படுகின்றன. மெச்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அநுமான் முதலிய தெய்வங்கள் வழிபடப்பெற்றன. நடு அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும் இத் தெய்வங்கள் வழிபடப்பெற்றன''* என்று சமன்லால் என்பவர் கூறுகின்றார்.

**இராமாயணம் :**

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப்பெயர், பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ் மூன்றாம் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலைநிலப் பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரதனின் முன்னோர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே, தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங்காப்பியம் ஆகிய இலியதம் (Iliad) என்னும் காப்பியத்தின் கதையில் வரும் மாந்தர்களுக்கும் (Characters), இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பலதிற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெரு நூல்களுமே போர் நிகழ்ச்சியினை அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளன. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்து கொண்டு சென்றுவிடும் செய்தி கூறப்படுகின்றது.

கிரேக்க நாட்டின் இலியதம் என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் (Menelaus) இராமன்; ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டா நகர் (Sparta) அயோத்திநகரம், அகமெம்னன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ளஸ் (Petroclus) இலக்குவன்; நெஸ்ட்டார்(Nestor) ஜாம்பவான்; யுலிஸிஸ் (Ulysses) ஆஞ்சநேயன்; ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத்தன்மை இவ்விரு பெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றது. இன்னோரன்ன சான்றுகள் பலவும், இந்துமதத்தின் கருத்துக்கள் கதைகள் கொள்கைகள், உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை நுண்ணிதின் எண்ணியுணரப் பயன்படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

**ஒப்புமைத் தன்மைகள் :**

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண்டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

---

* "Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha-Bharatha......Shiva, Ganesha, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoise-incarnation (Kurma Avatar), were some of the Hindu Gods worshipped in Central and South America......After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu Colonisation of America The stones in every corner of America speack of Hindu influences."

—Chaman Lal

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைத்து வளர்க்கப் பெற்ருர். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும் தனது உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரானின் அவதாரம்பற்றிய அறிவிப்பு, முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே, ஏரோது அரசனுக்கும் அசரீரியினல் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப்பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good Shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரானும், ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனுகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாகக் 'கோபாலன்' என்று பெயர் பெற்று விளங்கினுன்; இயேசு மலைச் சொற்பொழிவு(Sermon on the Mount) நிகழ்த்திஞர். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த்தட்டின் மீது இருந்து, பகவத் கீதை (Song Celestial) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.*

**விவேகானந்தர் :**

இந்து மதத்தின் இணையற்ற சிறப்பு, **விவேகானந்த சுவாமிகள்** அவர்களால், அமெரிக்க நாட்டில் சிகாகோவில் கூடிய உலகச் சமய மாநாட்டில், அனைத்து அறிஞர்களின் உள்ளங்களையும் கவரும் முறையில் எடுத்து விளக்கப் பெற்றதனை நாம் அறிவோம். வீரபுருஷராகிய விவேகானந்த சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்ற **இராமகிருஷ்ணர் பணிமன்றம்**, இன்று உலகத்தின் பல பகுதிகளிலும், நூற்றுக்கு மேற்பட்ட பல கிளை நிலையங்களைத் தோற்றுவித்து, இந்துமதத்தைப் பரப்பிச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

**முடிவுரை :**

இந்து சமய வரலாற்றிலும், மறுமலர்ச்சியிலும் விவேகானந்தருக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு. தேசபக்தி, தெய்வ பக்தி, ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்து நமது இந்து மதவளர்ச்சிக்கு அவர் சீரிய சிறந்த பணிபுரிந்துள்ளார். நாட்டுப்பற்றுப்போலவே, சமயப் பற்றும் நமக்கு மிகமிகஇன்றியமையாததாகும். நாம் நமது இந்து சமயத்தை மிகவும் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்ருேம். 'இந்து மதம் வாழ்ந்தால் தான் இந்தியாவும் வாழும்' என்பது விவேகானந்தர் விடுத்த எச்சரிக்கை. ஆதலின் நாம் இந்து மதத்தை இக்காலநிலைக்கு ஏற்பப் போற்றி வளர்த்து, நலம்பலவும் அடைய முற்படுவோமாக!

—ஆசிரியர்

---

* "The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study. The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion ....."

—Dr. S. Radhakrishnan.

GAZETTEER UNIT APR MADRAS RECORD OFFICE BUILDINGS

# மகாபாரதம்

அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

ஆறு மாதங்கள் கடந்தபின் அங்கு வியாச முனிவர் வந்தார். பாண்டவர்கள் அவரைப் பக்தியுடன் பணிந்தார்கள்.

**ஏகசக்ர நகர வாசம் :**

''குழந்தைகளே, கடோத்கஜன் பிறந்ததும் இடிம்பி விடைபெற்றதும் நான் அறிந்தேன். இனி நீங்கள் சில காலம் பிராம்மண வடிவுடன் இருங்கள். அருகில் ஏகசக்ர நகரம் என்ற ஒரு அக்கிரகாரம் உளது. அதில் சென்று வாசம் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டுச் சென்றார்.

வியாசர் கூறிய மந்திர சக்தியால் அவர்கள் அந்தணவடிவம் பெற்றார்கள். பல வனங்களைக் கடந்து ஏகசக்ரநகரத்தை அடைந்தார்கள். அங்குள்ள அந்தணர்கள் அகதிகளாகிய அவர்களை இன்சொல்கூறி வரவேற்றார்கள். ஒரு பிராம்மணருடைய வீட்டில் பின்கட்டில் வசித்தார்கள்.

பாண்டவர்கள் மரவுரி உடுத்தும் சடை முடியுடனும் பிட்சை எடுத்து உண்டார்கள்.

நகரமாந்தர்கள் ''காண்பதற்கு இனிய இவர்கள் பிட்சை எடுப்பதற்கு உரியவர்கள் அல்லர். தேவ குமாரர்களைப் போலக் காட்சி தருகின்றார்கள். அரசாளத் தக்கவர்கள். ஏதோ ஒரு காரணத்தினால் இப்படி மாறு வடிவங்கொண்டு வாழ்கின்றார்கள்'' என்று அறிவின் திறத்தால் புலனாகியறிந்து உரையாடினார்கள்.

பீமார்ச்சுனர்கள் சென்று மௌனமாகப் பிட்சை எடுப்பார்கள், அந்த ஊரின் அந்தணப் பெண்கள் அன்போடு அன்னமும் பட்சணமும் நிரம்ப இடுவார்கள். தனது பிள்ளைகள் ஐயம் ஏற்பது குறித்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள் குந்தி. செங்கோல் பிடிக்கின்ற கரத்தில் பிட்சை ஏனத்தைப்பிடிக்க நேர்ந்ததே என்று நினைத்து அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது. நிலம் நனைய அழுவாள்.

பிட்சான்னத்தை வாங்கிய அவள், அதில் ஒரு பாதியை பீமனுக்குத் தருவாள். மற்றப் பாதியை ஐந்தாகப் பகிர்ந்து ஐவரும் புசித்து வந்தார்கள்.

பீமன் பாதி பங்கு அன்னத்தை உண்டும் அவன் பசியடங்கவில்லை. பெருந்தீயில் ஒரு துளி நெய்விட்டதுபோல் இருந்தது. வர வர அவன் உடம்பு இளைத்தது. சரீரம் வெளுத்தது.

''அம்மா; நீ தரும் உணவு காய்ந்த மணலிலே விழுந்த நீர்த்துளிபோல் உடனே செரித்துவிடுகின்றது. எப்போதும் பசியினால் நான் துயரப்படுகின்றேன்'' என்றான்.

இதைக்கேட்டுக் குந்தி மிக்க வருத்தம் அடைந்தாள். ''என் அரண்மனையில் நாள் தோறும் பதினாயிரக்கணக்கான பேர்கட்குப் பால் சோறு படைத்த நான், என் மகனுக்கு வயிறு நிறைய அன்னந்தரும் இயல்பில்லாதவளாக இருக்கின்றேன், தாயாதிகளது

கொடுமை மிகவும் நிந்திக்கத் தக்கது'' என்ருள். ''மகனே ! நீ கொணரும் அன்னத்தில் பாதி உனக்குத் தருகின்றேன், நிரம்பக் கொண்டு வா'' என்ருள். ''அம்மா ! அதற்கு மேல் பெரிய ஏனமே இல்லே. நான் என் செய்வேன்?'' என்ருன் பீமன்.

மறுநாள் காலே பீமன் ஏரிக்கரையில் வடக்கு நோக்கி அமர்ந்து சிவசிந்தனேயுடன் பல் துலக்கிக் கொண்டிருந்தான். ஒரு குயவன் வண்டியில் மண்ணே நிறைத்து மாட்டைப் பூட்டி ஓட்டினுன், சக்கரம் சேற்றில் புதைந்து விட்டது, சுற்றும் முற்றும் பார்த்தான். பல் விளக்கும் கரிய பிராமணனேக் கண்டான். ''ஐயரே இந்த சக்கரத்தைச் சிறிது தள்ளும்'' என்ருன். பீமன், பல்குச்சியை வைத்துவிட்டு வந்தான்.

## பீமனுடைய விளேயாடல் :

''ஏய்! வண்டியிலும் களிமண், உன் மண்டையிலும் களி மண்ணு; அதிக பாரம் இட்டு மாட்டைத் துன்புறுத்தலாமா? மாட்டை அவிழ்த்துவிட்டு நீ இப்படி வா'' என்ருன். ஒன்றும் விளங்காத குயவன் மாட்டையவிழ்த்து விட்டான். பீமன் அநாயாசமாக அந்த மண்ணே வண்டியுடன் தூக்கிக்கொண்டுபோய்க் குயவன் வீட்டில் விளேயாட்டாக வைத்தான்.

இதைக்கண்டு அதிசயம் அடைந்த குயவன் ''ஐயா ! உனக்கு நான் என்ன செய்யட்டும்? இந்த மண் ஏனங்களில் வேண்டியன எடுத்துக் கொள்ளும்'' என்ருன். ''அப்பா; எனக்கு ஒன்றும் வேண்டாம், நான் யாருக்கும் பயன் கருதி உதவி செய்வதில்லே, ஒருவனுக்கு ஒருவன் உதவுவது மனிதனுடைய கடமை'' என்ருன்.

''ஐயா ; என் மனத்திருப்திக்காக ஒன்றை நீர் பெறத்தான் வேண்டும்.''

''அப்படியானுல் இந்த வண்டி மண்ணினுல் ஒரே ஏனம் செய்துகொடு,''

''ஏன் அது ? உரம் கொட்டி வைக்கவா''

''இல்லே, இல்லே; நீ செய்து கொடு,''

அதேபோல் ஒரு வண்டி மண்ணேயும் இட்டு, குதிர்போல் ஒரு பானே செய்து தனியே சுட்டு எடுத்தான்,

பீமன் அந்த பெரிய ஏனத்தைக் கொண்டு போய் ஏரியில் கழுவி அதை எடுத்துக்கொண்டு வீதியில் பிட்சை எடுக்க வந்தான். பிராம்மணப் பெண்கள் அதைக்கண்டு நகைத்தார்கள். நிரம்ப உணவுகளே வகைவகையாக இட்டார்கள். அவற்றைக் கொண்டுபோய், துணேவர்கட்கும் தாய்க்கும் சிறிது தந்து, மிகுதியை உண்டு பீமன் உடற்பயிற்சி செய்து சிங்க ஏறுபோல் உலாவினுன்.

ஒருநாள் மாலே தருமரும் அர்ச்சுனனும் நகுலனும் சகாதேவனும் பிட்சைக்குச் சென்ருர்கள். பீமன் மட்டும் குந்தியுடன் இருந்தான். முன் கட்டில், வீட்டுப் பிராம்மணரும் அவர் மனேவியும் 'ஓ' என்று அழும் குரல் கேட்டது.

பீமன் ''அம்மா; வீட்டு ஐயர் அழுகின்ருர். நீர் போய்க் காரணத்தைத் தெரிந்து கொள்ளும். நாம் அவர்கட்கு அவசியம் உதவி செய்ய வேண்டும்'' என்ருன்.

குந்தி ''மகனே! நாம் இவர்கள் வீட்டில் இத்தனே நாட்களாகக் குடியிருந்தோம். அந்த வகையில் நாம் இவர்கட்குத் தக்க தருணத்தில் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்ருேம். செய்நன்றி மறவாதவன்தான் மனிதன். நீ இரு. நான் போய் அறிந்து ஆவன புரிவேன்'' என்று கூறிக் குந்தியம்மை ஆங்குச் சென்ருள்.

## வேதியரின் துயருரை :

அங்கே பிராம்மணர் மனேவியைப் பார்த்துக் கூறுகின்ருர்; ''பெணிமணியே? நமக்கு வந்துள்ள துன்பக் கடலுக்குக் கரையே யில்லேயே. இந்த துயரமாகிய தீயை எப்படி நாம் அணேக்க முடியும், நான் முன் ஒரு காலத்தில் இந்த நகர் குடியிருக்கத் தக்கதன்று. புறப்பட்டு அயல் தேசம் போவோம் என்றேன். அப்போது நீ உன் தாய் தந்தையரை விட்டுப் பிரிய மனம் இன்றி வர மறுத்தாய். இப்போது உன் தாய் தந்தையர் பரலோகம் போய் விட்டார்கள்.

நாளைக் காலை பகாசுரனுக்கு உணவு அனுப்பும் முறை நம்முடையது. பெண்ணே; நீ உத்தமமான குணம் படைத்தவள், இத்தனை காலம் இல்லறத்தில் என்னுடன் ஒத்து உழைத்தாய். ஒரு போதும் எனக்கு மாறுபட நீ நடந்ததேயில்லை. கற்பு நெறியில் நின்றவள், உன்னை நான் எப்படி அசுரனுக்கு உணவாக அனுப்புவேன்? பெண் கொலையாகுமே? அன்றி இந்த மகள் ஒரு தக்கவரனுக்குத் தரத்தக்கவள். இவளால் குலம் வளருமே! குணம் நிறைந்த இச்சிறுமியை எப்படி நான் உயிருடன் அசுரனிடம் அனுப்புவேன்? இம்மகன் சிறுபிள்ளை. இவனால் நம் குலம் வளரவேண்டும். நமக்கு நீர்க்கடன் இவன் தானே செய்யவேண்டும்? அன்று நீ என்னுடன் புறப்பட்டிருந்தால் இந்தப் பெருந்துன்பம் நேர்ந்திருக்காது. பந்த பாசத்தால் நீ இந்த ஊரில் இருக்க விரும்பினாய். அதன் பயனை இப்போது அனுபவிக்கின்றாய். ஆகவே பகனுக்கு உணவாக நான்போகின்றேன். இக்குழந்தைகளுடன் நீ வாழ்'' என்றார்.

## பார்ப்பனியின் பரிவுரை :

அந்தணனுடைய மனைவி கூறுவாள்; ''சுவாமி: நீர் ஏன் கவலைப்படுகின்றீர். ஞான வாளினால் கவலையைச் சேதிக்க வேண்டும். அது தான் தங்களைப்போல் படித்தவர்களுடைய தன்மை. வீணே நீர் வியசனம் அடைய வேண்டாம். கணவனுடைய கவலையை மாற்றுவது தான் கற்புடைய மாதரது கடமை. நான் எல்லாச் சுகங்களும் அடைந்துவிட்டேன். சுமங்கலியாக மரணம் அடைவது என் பாக்கியம். நீர் போய்க் குழந்தையைக் காப்பாற்ற முடியாது. கவலைப்படுவீர். பிதா இன்றிப் பிள்ளைகள் முன்னுக்கு வராது. அன்றி நாதன் இல்லாத என்னையும் பலர் விரும்பக் கூடும். அன்றிப் பெண் கொலை கூடாது என்று பகன் என்னை விட்டுவிடவுங்கூடும். கொன்றாலும் துன்பம் என்னுடன் முடிவு பெறட்டும். ஆதலால் நான் போகிறேன். நீர் ஆறுதல் அடையும்'' என்றாள்.

மகள் கூறுகின்றாள்; ''அப்பா, அம்மா நீங்கள் ஏன் இப்படி வருந்தி அழுகின்றீர்கள். குழந்தைகளால் தாய்தந்தையரது கவலை தீர வேண்டும். மாதா பிதாக்களின் மனதை மகிழச் செய்வதே மக்களின் கடமை. நான் இனி ஒருவன் வீட்டில்போய் வாழவேண்டும். நல்ல கணவன் கிடைக்கவில்லையானால் என் வாழ்வு அவலமாகும். ஆதலால் நானே பகனுக்கு உணவாகப் போகின்றேன். இது எனக்கும் சுகம். உங்கட்கும் சுகம்'' என்றாள்.

தாய், தந்தை, தமக்கை மூவரும் அழுவதைக்கண்ட அச்சின்னஞ்சிறு பாலகன், ''அப்பா: அழாதே. அம்மா! அழாதே, அக்கா அழாதே. நான் இத்துரும்பினால் பகனைக் கொல்லுவேன். அவனை இதனால் அடித்துப் போடுவேன்'' என்று மழலை மொழியால் கூறினான். அக்குழவியின் மழலையைக் கேட்ட அவர்கள் துயரை மறந்து நகைத்தார்கள்.

அந்த நேரத்தில் குந்தி அங்குச் சென்று அவர்களைப் பார்த்து ''உங்கட்கு என்ன கவலை? உங்கள் துயரை நான் மாற்றுவேன்'' என்றாள்.

## வேதியரின் மனைவி கூறுவது :

''தபோதனையே! எங்கள் கவலை எளிதில் மாற்றக்கூடியதன்று, இந்நகரத்தின் அருகில் உள்ள மலையில் பகாசுரன் என்ற ஒரு அரக்கன் வாழுகின்றான்; யமுனை உற்பத்தியாகும் அந்த இடத்தில் ஒரு குகையில் அவன் இருக்கின்றான். அவன் முன்னொரு சமயம் இந் நகரில் புகுந்து எல்லோரையும் ஒரே முறையில் பிடித்துப் பிடித்து விழுங்கத் தொடங்கினான். அப்போது அவனை வணங்கி அவனுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். வீட்டுக்கு ஒருவர் நியதியாக அவனுக்கு உணவு தரவேண்டும். வண்டியன்னம், குடம் குடமாகக் குழம்பு, பாயசம், பால், தேன், தயிர், கள், சாராயம், கூடை கூடையாகப் பொறியல், கூட்டு, ஊறுகாய், இரு காளை மாடு, ஒரு மனிதன் இவைகளை அனுப்புவதாக நியதி செய்தார்கள். 13 வருடங்களாக இந்த முறைப்படி வீட்டுக்கு ஒரு நாள் என்று, அப்பாதகனுக்கு உணவு அனுப்பி வருகின்றார்கள். அதனால் அப் பகன் சாந்தமடைந்து எங்களுக்கு மற்றவர்களால் துன்பம் அடையாமலும் பாதுகாத்து வருகின்றான். பக்கத்திலுள்ள வேத்ரகீய நகரத்து மன்னன் இந்த இடரைத் தவிர்க்க முடியாது பகனுக்கு அடங்கி யிருக்கின்றான், இன்று எங்கள் முறை. இச்சிறு பிள்ளையை எப்படி அனுப்புவோம்,

நாங்கள் நால்வருமே உணவாகப் போவதாகக் கருதுகின்றோம். எங்கள் துயரம் இதுதான்'' என்றாள்.

## குந்தியின் திருமொழி :

''அம்மணி; நீ அஞ்ச வேண்டாம். நீங்கள் யாரும் பகனுக்கு உணவாகப் போக வேண்டாம். எனக்கு ஐந்து புதல்வர்கள் இருக்கின்றார்கள். நான் ஒரு புதல்வனை அனுப்புவேன்'' என்று குந்தியம்மை கூறினாள்.

அந்தணர் ''அம்மா; இது நியாயமன்று. எங்கள் வீட்டுக்கு வந்த அதிதிகள் நீங்கள், அகதிகளை நாங்கள் காக்கவேண்டும். உன் மகனை அனுப்பும் செயல் பாவச் செயல். உன் புதல்வனை அனுப்பும் இச்செயலை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்'' என்றார்.

குந்தி ''பிராம்மணரே! என் மகன் மந்திர சித்தி பெற்றவன். அவன் பல அரக்கரைக் கொன்றவன். பெருந்திறல் படைத்தவன். அவன் பகனைக் கொன்றுவிட்டு இந் நகரின் துயரை வேருடன் களைவான், அவன் பேராற்றல் படைத்தவன். ஆதலால் அவனை அனுப்பினால் இந்த ஊருக்கு நன்மை விளையும்'' என்றாள். அந்தணர் இசைந்து மகிழ்ந்தார்,

குந்தி பீமனிடம்நடந்ததை வந்துவிபரமாகக் கூறினாள். பீமன் கேட்டுத் தனக்கு ஒரு யுத்தம் நேர்ந்திருப்பதை யறிந்து பெரிதும் மகிழ்ந்தான்.

அதுசமயம் தருமர் முதலியவர்கள் அங்கு வந்தார்கள். தருமர் பீமன் பெரு மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து, ''அம்மா! பீமனுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் யாது'' என்று கேட்டார். குந்திதேவி தருமரிடம், நடந்தவை யனைத்தும் விவரமாக விளம்பினாள்.

தருமர் கேட்டுப் பெருந்துயரம் அடைந்தார். ''அம்மா உனக்கு அறிவுமயங்கிவிட்டதா? நீர் இந்த முறையில்லாத செயலைச் செய்ய இசையலாமா? பீமன் நம்மை அரக்கு மாளிகையிலிருந்து காத்த கருணைக்கடல். அவனால் தானே நமக்கு அரச வாழ்வு உண்டாக



வேண்டும். இந்த பீமனைப் பார்த்துத் தானே துரியோதனன் தூங்காமல் இருக்கின்றான். நமக்குத் தூண்போல் உதவி புரியும் தம்பியை நீ விடத்துணிந்தது தகுதியா? இதனை நான் விரும்பவில்லை'' என்றார்.

## பீமன் திறம் :

''தருமா! உன் தம்பி பிறந்து ஒரு மாதம் ஆயிற்று. இவனை இடையில் எடுத்துக்கொண்டு உன் பிதாவுடன் நான் காட்டில் ஒரு வனதேவதையை ஆராதிக்கச் சென்றேன். ஒரு புலியைக் கண்டு அஞ்சி நடுங்கினேன். இடுப்பில் இருந்த பீமன் நழுவி மலை உச்சியிலிருந்து அடியில் ஒரு பாறை மீது வீழ்ந்தான். நானும் உன் பிதாவும் குழந்தை இறந்திருப்பான் என்று அழுது ஓடிப் போய்ப் பார்த்தோம். இவன் விழுந்த பாறை விபூதியாகியிருந்தது. இவன் அசையவேயில்லை. அன்று இவன் வலியைக் கண்டேன். இவனால் பகன் மாள்வான். இந்திராதி தேவர்களும் இவன் எதிரே நிற்கமாட்டார்கள். இவனால் இந்நகரம் உய்வு பெறட்டும்'' என்றாள் குந்தி. தருமர் மகிழ்ந்தார். ''அதுபடியே செய்க. நம்மைப் பாண்டவர் என்று பிறர் அறியாமல் இருக்கவேண்டும்'' என்றார்.

மறுநாள் காலை உணவுகள் ஆயத்தம்ஆயின. பீமனும் உடன் பிறந்தாரும் உறவினரும் உண்டார்கள். வண்டியில் அன்னத்தை நிரப்பினார்கள். சாராயம் குழம்பு தயிர் பால் தேன் நிரம்பிய குடங்களைத் தொங்கவிட்டார்கள். பொறியல் அவியல் நிறைந்த கூடைகளை வைத்துக் கட்டினார்கள். பீமன் எல்லோரையும் பணிந்து வண்டியில் ஏறிப் புறப்பட்டான்.

சிலர் ''பாவம் இப்பிள்ளை உணவுக்காகத் தன்னையே தியாகஞ் செய்கின்றான்'' என்றார்கள். சிலர் ''இவன் மந்திரசித்தி பெற்றவனும். பகனைக் கொல்லுவானும்'' என்றார்கள்.

காலைக் கதிரவன்போல் ஒளி செய்து கொண்டு பீமன் வனத்தை நோக்கிச் சென்றான். ''இந்த அரிய அன்னத்தை அரக்கனுக்குத் தரக்கூடாது'' என்று எண்ணினான்.

வழியில் ஒரு நதி. அங்கு வண்டியை நிறுத்தி மாடுகளை அவிழ்த்துவிட்டு அந்தப்

புனிதமான உணவை விரைந்து உண்டு கொண்டிருந்தான்.

''நேரங்கடந்துவிட்டதோ; இன்னும் உணவு வரவில்லையே'' என்று கோதிப்புற்றுன் பகாசுரன். கரிய உருவமும், கோரபற்களும், மலை போன்ற உயர்ந்த உடம்பும் உடைய அவன் நிமிர்ந்து பார்த்தான். ஓடி வந்து பீமன் முதுகில் குத்தினுன். பீமன் உண்ணுகின்ற உணவு நன்கு உள்ளே செல்ல, அவனைப் பார்த்து ''பெரும் உதவி செய்தாய், முதுகில் இன்னும் சில குத்து வை. சாப்பிட்டு விட்டு உன்னுடன் போர் செய்வேன்'' என்றுன். அவன் பெரிய ஆச்சாமரத்தைப் பிடுங்கி எறிந்தான். அதைப் பீமன் இடக்கரத்தால் பிடித்து எறிந்தான். பீமன் உணவு முழுவதும் உண்டு, நீர் பருகி, தோள்தட்டி அவனுடன் போருக்குச் சிங்கம் போல நின்றுன்.

பகனும் பீமனும் நீண்டநேரம் போர் செய்தார்கள். மரங்களையும் கற்பாறைகளையும் இட்டு ஒருவரையொருவர் கொல்ல முயன்றுர்கள். அக்காடு வெகுதூரம் வரை கல் மரம் ஒன்றும் இன்றி ஆமை முதுகு போல் ஆயிற்று.

பகன் பீமனைத் தூக்கி எறிந்தான். பீமன் சிரித்துக் கொண்டேஎழுந்து அவனைப் பிடித்துப் பூமியில் அடித்து, அவன் இடுப்பை ஒடித்து, காலால் துவைத்து அவனைக் கொன்றுன்.

பகனுடைய தம்பி முதலிய உறவினர் அது கண்டு அஞ்சிப் பீமனைத் தஞ்சம் புகுந்தார்கள். பீமன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் யாருக்கும் தீங்கு செய்தல்கூடாது. செய்தால் பகன் போன உலகுக்கு உங்களையும் அனுப்பி விடுவேன்'' என்று கூறி; அவர்களை அடக்கி விட்டு நீராடி, வண்டியையும் மாடுகளையும் அந்தணரிடம் சேர்த்துத் தாயாரையும் தமையனுரையும் வணங்கி, பகனைக் கொன்ற திறத்தைக்கூறி இளைப்பாறினுன்.

மறுநாள் காலை பிராம்மணர்கள் வெளியே சென்றவர்கள் பகன் மாண்டிருப்பதைக் கண்டு ஊருக்குள் செய்தியைப் பரப்பினுர்கள். ஊரில் உள்ள ஆண் பெண் கிழவர் எல்லோரும் போய்ப் பார்த்து அதிசயமும் ஆனந்தமும் அடைந்தார்கள். மந்திரசித்தி பெற்ற ஒரு பிராம்மணன் கொன்றுனும் என்று பேசிக் கொண்டார்கள். அதுமுதல் அந்நகரம் அல்லல் இன்றி இனிது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. பீமனுக்கு அதிகப் பெருமையுடன் நிரம்பவிருந்து வைத்து உபசாரம் நடந்தது.

பாண்டவர்களின் அந்நகரில் இப்படி இனிது வாழ்ந்தார்கள் (தொடரும்)

## மதிப்புரை

**கந்தபுராண நவநீதம்:** நமது செந்தமிழ் மொழியில் வழங்கிவரும் ''சிறப்புடைய புராணங்கள்'' பலவற்றுள், ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் அருளிச் செய்த கந்தபுராணமும் ஒன்று. நூலின் பொருளும், அதன் நடையும், அதனது ஆசிரியரின் அருமை பெருமைகளும் அளவிடற்பாலன அல்ல. யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், அதனை முதன் முதலில் அச்சிட்டு அரியபெரிய தொண்டு புரிந்தார்கள். அவர்தம் அரும்பெறல் மாணவர்களுள் ஒருவராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி செந்தில்நாத ஐயர் அவர்கள், கந்தபுராணம் என்னும் அளப்பரும் திருப்பாற் கடலில் ஆழ்ந்து திளைத்து, அதனைத் தமதுமதிநலம் என்னும் மந்தர மலையாற் கடைந்து, கந்தபுராண நவநீதம் என்னும் இச் சிறந்த நூலை இயற்றியளித்துள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ செந்தில்நாத ஐயர் அவர்களைச் சைவத் தமிழுலகத்தில் அறியாதவர் எவரும் இரார். சைவ வேதாந்தம், தேவாரம் வேதசாரம், பிரம்மசூத்திர நீலகண்ட பாஷ்ய மொழிபெயர்ப்பு, சிவஞானபோத வசனுலங்கார தீபம் முதலிய அரும்பெரும் நூல்களை ஆராய்ந்து இயற்றி அளித்த ஞானத்தவ முனிவராகிய அருட்பெரும் சான்றோர் அவர். அப் பெருந்தகையார் ஆராய்ச்சி நலஞ்சான்ற இவ் அரும்பெறல் நூலைச் சமயப் பிரகரணம், வேதாகமப்பிரகரணம், பதிபசுபாசப் பிரகரணம், சரியாபாதப் பிரகரணம், கிரியாபாதப் பிரகரணம், யோகபாதப் பிரகரணம், ஞானபாதப் பிரகரணம், பக்திப் பிரகரணம் என்னும் பல பகுதிகளாகப் பிரித்து, கந்தபுராணத்தின் சமய தத்துவ நுட்பங்களைச் சால்புற விளக்கியுள்ளார்.

சிவநெறிச் செந்தமிழன்பர்களுக்கு மிகச் சிறந்த ஒருபெரும் ஞானப்புதையலாகத் திகழும் இந்நூல், பேராசிரியர் திரு. சி. சிவகுருநாதன் M.A. அவர்களின் நன்முயற்சியால் சிறந்த முறையில் கவின்மிக அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. அனைவரும் படித்து இன்புற வேண்டிய அரிய ஆராய்ச்சி நூல்.

கிடைக்குமிடம்: கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை. விலை ரூபா நான்கு.

—ஆசிரியர்.

# பிரபுலிங்க லீலை *

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

## முன்னுரை :

நமது தமிழ் நாட்டில், சிவநெறிப் பெருங் கவிஞர்களாக அண்மைக் காலத்தில் விளங்கி யிருந்தவர்கள் பலர், அவர்களுள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்; குமரகுருபரர் (கி. பி. 1600 - 1680), சிவப் பிரகாசர் (கி, பி. 1630 - 1670), சிவஞான முனிவர் கி. பி. 1785 என்னும் இம் மூவரும், சிவபிரானின் முக்கண்களைப் போன்று, செந் தமிழ்ச் சிவநெறியுலகில் மிகவும் புகழ் பெற்றுச் சிறப்பு வாய்ந்தொளிரும் பெருங் கவிஞர்கள் ஆவர் !

## சிவப்பிரகாசர் :

இவர்களுள், சிவப்பிரகாசர் என்னும் செந்தமிழ்ப் பெருங் கவிஞர் பெருமான் பாடி யருளிய நூலே, பிரபுலிங்க லீலை என்பது. இவரே நன்னெறி, நால்வர் நான்மணிமாலை, சோணசைலமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருவெங்கைக் கலம்பகம், திரு வெங்கைக் கோவை, பழமலை அந்தாதி முதலிய பல சிறந்த பிரபந்தங்களைப் பாடியருளியவர், திருநெல்வேலியிற் சிந்து பூந்துறையில் வாழ்ந் திருந்த தருமபுர ஆதீனம் வெள்ளியம் பல வாணத் தம்பிரான் சுவாமிகள் பால் பயின்று, இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர். இவர். ''கற்பனைக் களஞ்சியம்'' என்று கற்றறி புலவர்கள் இவரை வியந்து போற் றுவர். இவர் துறைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவராதலின். துறைமங்கலம் சிவப் பிரகாசர் எனவும் வழங்கப் பெறுவர்.

கோவைக்கு அணித்தாக உள்ள பேரூரில் எழுந்தருளியிருந்தவரும், வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் என்னும் அரிய நூல்களை அருளிச் செய்தவரும் ஆகிய தவத்திரு சாந்த லிங்க சுவாமிகளும், நமது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் நெருங்கிய நண் பர்கள். மயிலம் பொம்மபுர ஆதீனத் தலைவர் சிவத்திரு சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் பால் ஈடுபட்டு, அவர்தம் அருளாசி பெற்ற வர்கள். அவர் மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது, திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ் என்னும் நூல்களைச் சிவப்பிரகாசர் பாடி யுள்ளார்.

சிவஞான பாலைய தேசிக சுவாமிகளின் அருளாணைப்படி, சிவப்பிரகாசர் தமது தங்கை ஞானம்பிகையம்மையைச் சாந்தலிங்க சுவாமி களுக்கு மணம் செய்து கொடுத்து மகிழ்ந்தார், இவருக்கு வேலையர் கருணைப்பிரகாசர் என் னும் இரு தம்பியர்கள் இருந்தனர், அவர் களும் புலமை நலத்திற் சிறந்து புகழ்பெற்று

---

* சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில், முதுபெருஞ் சான்றோர்-சைவம் பெருக்கும் சீலர் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் அமைத் துள்ள அறக் கட்டளைகளின் ஆதரவில், திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நிகழ்த்திய சொற்பொழிவு. (2 - 3 - 70). - ஆசிரியர்

விளங்கியிருந்தனர், இம்மூவரும் சேர்ந்து, சில சில பகுதிகளாகச் செய்து முடித்த சிறப்புடையதே, திருக்காளத்திப் புராணம் என்பர் பெரியோர்.

தமிழில் சதுரகராதி இயற்றியவரும், தேம்பாவணி என்னும் காப்பியம் பாடியவரும் ஜோசப் கான்ஸ்டன்டைன்பெஸ்கிஎன்னும் பெயரினரும் ஆகிய வீரமா முனிவர் என்பவர், சிவப்பிரகாசரின் காலத்தவர் என்றும்,அவரை மறுத்து நமது சிவப்பிரகாசர் 'இயேசுமத நிராகரணம்' என்னும் நூல் ஒன்று இயற்றினரென்றும் கூறுவர். அதில் இருந்து சில செய்யுட்களைத்திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் "கொலை மறுத்தல்" உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். ஆனால் அந் நூல் இப்போது கிடைத்திலது.கன்னடமொழியில் சாமராசர் என்பவர்(கி. பி. 1400 - 1440) பாடிய நூலைத் தழுவியே, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்க லீலை பாடியருளினர். சாலிவாகன சகாத்தம் 1574 - ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் ஞாயிற்றுக் கிழமையன்று சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்க லீலையைப் பாடி முடித்தார் என்பது,

"பார்கெழு சகாத்தம் மூவைந்
நூற்றெழுபான் நான்கு ஆக,
ஆர்தரு கர நாமம் கொள்
ஆண்டுறு விடை ஞாயிற்றில்
சீர்கெழும் அல்லமன் றன்
திருவிளை யாடற் காதை,
கார்கெழு மிடற்றெம் கோமான்
கருணைகொண்டு இயம்பி னனே"

எனவரும் செய்யுளால் தெரிகின்றது. சிவப்பிரகாசர் வாழ்ந்திருந்த காலத்தைக் கணித்தறிதற்கு, இச்செய்யுள்தான் தக்க சான்ருக விளங்கித் துணை புரிகின்றது. இதன்படி, சிவப்பிரகாசர் கி. பி. 1652 - ஆம் ஆண்டில், பிரபுலிங்க லீலை பாடி முடித்தார் என அறிகின்ருேம்.

## நூற்றலைவர் :

பிரபுலிங்க லீலை என்னும் சொற்ருெடரில், பிரபு என்பது அல்லமாப் பிரபு எனவும், லிங்கம் என்பது சதாசிவமூர்த்தி ஆகிய பரசிவம் எனவும், லீலை என்பது அருள் விளையாடல் எனவும் பொருள்தரும். பரமசிவம் எனப்படும் சிவபெருமானே, அல்லமாப்பிரபு என்னும் அருட் பெருங்குரவராக இந்நிலவுலகில் தோன்றி நிகழ்த்தியருளிய திருவிளையாடலின் திறனை விளக்கும் நூல் என்பது, இதன் திரண்ட பொருள்.

அல்லமாப்பிரபு என்பவர், வீரசைவம் என்னும் இலிங்காயத மதத்தைப் பரப்பி வளர்த்தருளிய சான்ருேர்களுள், தலைசிறந்த ஒருவர். கல்யாணி நகரில் இருந்தவனும், கலாசூரி வம்சத்தவனும் ஆகிய பிஜ்ஜலன் (கி. பி. (1156 - 1167) என்னும் அரசனின், சமகாலத்தவர். மைசூர் மாநிலத்தில், ஷிமோகா வட்டத்தில் உள்ள பெல்காவி என்னும் இடத்தில் அவதரித்தவர்; சீவன்முத்தர்; நிர்விகல்ப சாதகர்; ஞான வைராக்கிய நலங்களில் தலை நின்றவர். இத்தகைய எல்லையற்ற பல சிறப்புக்களையுடைய அல்லமாப் பிரபுவின் அருமை பெருமைகளையும், அருட்டிறனையும் விளக்கி விரித்துரைக்கும் நூலே, பிரபுலிங்க லீலை.

## நூலின் சிறப்பு :

ஒரு மொழிக்கண் உள்ள நூல்கள் பல வகைப்படும். அவற்றுள் ஒரு சில, பகைவர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் பொருது மடிந்தொழிந்த செய்தியைக்கூறும். மற்றும் சில, காமவுணர்ச்சியைத் தூண்டி வளர்ப்பனவாக இருக்கும்; வேறு சில, வீண்பொழுது கழித்தற்கு ஏதுவாக நிற்கும். பிரபுலிங்கலீலை அத்தகையது அன்று. அஃது, உலக வாழ்வின் மயக்கம் ஆகிய சேற்றைக் கடப்பதற்கு ஊன்றுகோல், அன்பின் இயல்பையும், சிறப்பையும் விளக்கும் எழுதுகோல், அங்கம் லிங்கம் ஆகிய வியன் நிலத்தை அளந்து காட்டி அறிவிக்கின்ற அளவுகோல், தன்னைக் கற்பவர்களின் அறிவாகிய விளக்கினைச் சுடர்விட்டு ஒளி பெருக எரியும்படி செய்கின்ற தூண்டுகோல், பிரபுலிங்க லீலை என்னும் இந்நூல் காமதேனுவைப் போன்றது; நான்கு வரிகளாகிய நான்கு கால்களால் நடப்பது; அல்லமாப் பிரபுவின் பெருமையாகிய பாலினை, அன்பர்களாகிய கன்றுகளின், செவிகளாகிய வாயிலே ஊட்டி, அவர்களைச் செழுமையுற வளர்ப்பது. ஈக்கள் இரண்டு வகைப்படும். ஒருவகை புண்ணில் இருந்து ஒழுகும் சீழ் முதலிய அழுக்குகளையே விரும்பிச் சென்று உண்ணும், மற்ருெரு வகை,

மலர்களில் உள்ள தூய இனிய தேனையே விரும்பித் தேடிச் சென்று அருந்தும். அது போலப் புல்லியோர்கள் பயனில்லாத பிற நூல்களைப் படிப்பர். நல்லவர்களோ அல்லமரின் அருள் வரலாற்றையே விரும்பிப் பயின்று மகிழ்வார்கள் என்று, இந்நூலைத் தொடங்குகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

## நூற்பொருள் :

திருக்கயிலையில் சிவபிரானும் பார்வதி தேவியாரும் எழுந்தருளியிருந்தனர். அப்போது அங்கே மூவர்களும் தேவர்களும் முனிவர்களும் சிவபிரானைத் தொழுவதற்குப் போந்தனர். அன்பர்கள் கூடிய அப்பேரவையில் அம்பிகை இறைவனை நோக்கி, 'இவர்கள் அனைவரும் வீடுபேறு அடைவரோ?' என வினவினள். ''பெயரும் வடிவமும் பொருந்தி வினையினற் கட்டுண்டவர்கள் வீடுபேறு அடைய இயலாது. புவனியிற் போய்ப் பிறந்து குருவின் அருளைப் பெற்று யோகநெறி நின்றால்தான் வீடுபேறு அடைய முடியும்'' எனச் சிவபெருமான் விடை கூறினர். அது கேட்ட தேவி, அத்தகைய அருட்குரவன் யார்? என்று கூறியருளுக என்று வேண்டிக்கொண்டாள். அதற்கு இறைவன், "சுஞ்ஞானி என்னும் தாயும், நிராங்காரன் என்னும் தந்தையும் தவங்கள் பல செய்து வேண்டிக் கொள்ள, அவர்கள் பால் யாமே எமது மெய் வடிவத்தால் அல்லமன் என்னும் பெயருடைய மைந்தன் ஆகத் தோன்றினேம். அல்லமன் என்னும் அவ்வருட் குரவனைக் காண்டல் உனக்கும் இயலாததாகும்' என்று மறுமொழி புகன்றான். அதனைக்கேட்ட அம்பிகை, எனக்கும் கூடவா இயலாது'' என்று, சிறிது சினமும் வருத்தமும் தோன்ற வினவினள்.

அதற்கு இறைவன், ''நீ சினத்தல் வேண்டா, அல்லமன் என்னும் அருட்குரவன் அன்பர்களின் அன்புக்கு இணங்கி ஏற்ற உருவம் கொண்டு தோன்றுவான். அன்பினாலன்றி அவனை எவரும் காண்டல் இயலாது'' என்றான். அதுகேட்ட அம்பிகை, யான் உலகிற் பிறந்த எத்தகையோரையும் மாயையால் மயங்கச் செய்வேன். அங்ஙனமிருப்ப, அல்லமர் எங்ஙனம் என் மாயையின் பிடிப்பில் இருந்து தப்பி உய்தல் இயலும்? எனச் சினந்துரைத்தனள்.

அதற்கு இறைவன், அவ்வாறாயின், உன் ஆற்றலைக் காண்போம். நின் சூளுரை பொய்யாத வாறு அல்லமனைக் கண்டு பிடித்துக் கொணர முயலுதி. இல்லையேல் உனக்குத் தோல்வி யுறுதல் உறுதி'' என்றார். அம்பிகை ''என் சொல் எப்போதும் தவறாது'' எனப் புகன்று, அருகே நின்ற தமோகுணமாயை என்பவளை அழைத்து,' 'நீ மண்ணுலகம் சென்று அல்லமன் என்பவரைக் கண்டு இவண் கொண்டு வருக'' என்று கட்டளையிட்டாள்.

''தமோகுணமாயை இறைவியை வணங்கி; யான் அல்லமனின் இயற்கையை அறிந்து வருவேன்; தப்ப முயல்வானாகில் எப்படியும் பற்றி இழுத்துக் கொணர்வேன்'' என்று வஞ்சினம் கூறி, மண்ணுலகம் நோக்கி வந்தாள். விளவலம் என்னும் நாட்டில், மமகாரன் என்னும் அரசனுக்கும், மோகினி என்னும் அரசிக்கும் மகளாகத் தோன்றினள், அவட்கு மாயை என்னும் பெயர் சூட்டித் தந்தை மகிழ்ந்தான். ஆடல், பாடல் முதலிய கலைகளில் அவள் தேர்ச்சி பெற்று அழகு மிக்குத் திகழ்ந்தாள். அம்மாயை ஒரு சமயம், கோயிலுக்குச் சென்று, மதுகைநாதன் என்னும் இறைவனைப் பூசனை புரிந்து ஆடல் பாடல் நிகழ்த்துகின்றாள். அந்நிலையில், அல்லமாப்பிரபு ஒரு மத்தளிகன் வடிவம் கொண்டு அங்குப் போந்து, அவளது ஆடல் பாட்டுக்கு ஏற்ப மத்தளம் வாசிக்கின்றார். ''சிரலசைந்து ஆடா நின்ற சிறகர் போல், மத்தளத்தை விரல் அசைந்து அறைதல் அன்றி மெய்யசையாமல் நின்று'' வாசிக்கும் அல்லமரின் அருங்கலைத் திறன் கண்டு வியந்து மாயை அவன்பாற் காதல் கொள்கின்றாள். கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடித்து, அவளை விடுத்து அல்லமன் நழுவுகின்றான். மயக்க வந்த மாயை மயங்கித் தளர்ந்து வருந்துகின்றாள்,

நெடுங் காலமாகியும் சபதம் செய்து சென்ற மாயை திரும்பாமையால், இறைவி அவளது நிலையை அறிந்து வர, விமலை என்னும் சக்தியை அனுப்புகின்றாள். விமலை மண்ணுலகம் போந்து, மாயை மயக்கமுற்றுக் கிடக்கும் நிலையெலாம் உணர்கின்றாள். ஒருமுகமாக மனம் குவிந்து மெய்யன்பினல் இறைவனை வழிபட்டால் அல்லமனைக் காணலாம் என்று

மாயைக்கு விமலை அறிவுறுத்துகின்றாள். மாயை அல்லமரின் அருமை பெருமைகளை உணர்ந்து திருந்துகின்றாள். திருந்திக் கயிலைக்கு மீள்கின்றாள்.

மாயையின் சோர்வு கண்டு அம்பிகை மனம் கவல்கின்றாள். சத்துவ குணம் ஆகிய சக்தியை அனுப்பினால் அல்லமனைக் காணலாம் என்று இறைவன் கூற, இறைவி அவ்வாறே அனுப்புகின்றாள். அல்லமரை அறிந்து வர, இறைவன் நந்திதேவரை உலகிற்கு அனுப்புகின்றான். நந்திதேவர் **வசவண்ணர்** என்னும் வீரசைவச் சான்றோராக அவதரிக்கின்றார். சிவகணங்கள் சங்கமர்களாகவும் சரணர்களாகவும் உலகில் தோன்றுகின்றார்கள்.

இங்குளாபுரி என்னும் நகரத்தில், **மாதரசன் மாதாம்பிகை** என்னும தாய் தந்தையருக்கு மைந்தராகத் தோன்றி, நந்திதேவர் வசவண்ணர் என்னும் பெயர் பெற்று விளங்குகின்றார், கலியாணபுரத்தில் இருந்த **விச்சலன்** என்னும் சமண அரசன்பால் அமைச்சராகத் திகழ்கின்றார். சிவனடியார்களைப் போற்றிப் பூசித்து அமுதளித்து மகிழ்கின்றார். அல்லமரின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றார்.

அம்பிகையால் அனுப்பப்பெற்ற சத்துவ குண மடந்தை, **உடுதடை** என்னும் நகரில், **நிர்மலன் சுமதி** என்பவர்களுக்கு மகளாகத் தோன்றி, **மாதேவி** என்னும் பெயர் பெற்று விளங்குகின்றாள். **கௌசிகன்** என்னும் அரசன் மாதேவியைக் கண்டு காதல் கொள்கின்றான். சமணனாகிய அவன், சிவ பூசை செய்ய இசையாமையால், அவனை மணக்க மறுத்து, மாதேவி துறவுக் கோலம் பூண்டு அல்லமர் ஆகிய அருட்குருவைக் காண எங்கும் அலைந்து சுற்றித் திரிகின்றாள். அல்லமர் அவளை ஆட்கொண்டு அருளுபதேசம் புரிந்து காக்கின்றார். இங்ஙனமே **கொக்கிதேவர்; முத்தாயி அம்மை, சித்தராமையர், மருளசங்கரதேவர், கோரக்கநாதர்** முதலிய பலரையும், அல்லமதேவர் திருத்தி ஆட்கொண்டு அருள் புரிகின்றார்.

அவர்களுக்கெல்லாம் வீரசைவத்தின் சிறப்பையும், இட்டலிங்க பூசையின் மேன்மையையும் உணர்த்தி, உபதேசங்கள் புரிகின்றார். வசவண்ணர் அல்லம தேவரை அறியும் பொருட்டு, சூனிய சிங்காதனம் ஒன்று அமைக்கின்றார். அல்லமதேவர் அவ் அரியணை மேற் போந்து அமர்ந்து காட்சி தருகின்றார். வசவண்ணருக்கு, அல்லமர் பல அரிய அருளுரைகள் வழங்குகின்றார். அல்லமராலும் பசவராலும் வீரசைவ சமயம் எங்கும் பரவுகின்றது, உலகம் நலம் பெறுகின்றது. அம்பிகை அல்லமரின் அருமை பெருமைகளை உணர்ந்து அகமகிழ்கின்றாள். இதுவே பிரபுலிங்க லீலையின் சுருக்கமான திரண்ட பொருளாகும்,

(தொடரும்)

## செய்திச் சுருக்கம்

### ஆண்டு விழா :

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் ஆசியுடன் துவக்கப்பெற்ற **இந்து தர்ம மன்றத்தின்** நான்காம் ஆண்டு விழா, சென்னை மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில், *21 - 3 - 70—22 - 3 - 70* தேதிகளில், இரண்டு நாட்கள் சிறப்புற நடைபெற்றது.

முதல்நாள், திருப்பாவை - திருவெம்பாவை விழாவாகக் கொண்டாடப் பெற்றது. திருமதி பி. லீலா அவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடினர். காஞ்சிபுரம் **ஸ்ரீலஸ்ரீஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள், இரு நாட்களிலும் விழாவுக்குத் தலைமை தாங்கினார்கள். ஓவியர் திலகம் **'சில்பி'** அவர்கள் வரைந்த தெய்வத் திருவுருவப் படங்களின் கண்காட்சியை, அறநிலைய ஆணையர் **திரு. கே. எஸ். நரசிம்மன் B. A., B. L., I. A. S.** அவர்கள் திறந்து வைத்து விழா மலரை வெளியிட்டார்கள். அறநிலைய அமைச்சர் **திரு. கே. வி. சுப்பையா B. A.** அவர்கள் துவக்கவுரை நிகழ்த்தியதுடன், திருப்பாவை - திருவெம்பாவைப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர் சிறுமியர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். பரிசு பெற்ற பள்ளிகள்: மயிலைச் சரகம் *(1)* வன்னியர் சங்க ஆரம்ப பாடசாலை, *(2)* இராஜா அண்ணாமலைபுரம் (மேற்கு) ஆரம்ப பாடசாலை, *(3)* ஸ்ரீ சாரதா வித்யாலயா ஆதாரப் பயிற்சிப் பள்ளி, மாம்பலம் என்பனவாகும். இவ்விழாவில் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், **B. A., B. L.** திரு. சாவி ஆகியோர் உரை நிகழ்த்திச் சிறப்பித்தனர்.

இரண்டாம் நாள், இராஜ இராஜ சோழன் சதயத் திருவிழாவாக நடைபெற்றது. திரு, மு. அருணாசலம், **M. A.,** திரு. இ. ஆர். நாகசாமி, **M. A.,** திரு. சி. ஜகந்நாதாசார்யார், **M. A. L. T.,** திரு. ந. ரா. முருகவேள், **M. A., M. O. L.,** ஆகியோர் முறையே செம்பியன் மாதேவியார், இராஜ ராஜேசுவரம், இராஜ ராஜ சோழனின் அரசியல், கருவூர்த் தேவர் என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினர். செயலாளர் திரு. வி. மீனாட்சி சுந்தரம் அவர்கள் நன்றியுரை நவில, இறைவணக்கத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

**— ஆசிரியர்**

ஸ்ரீ:

# வைணவம்

மகாவித்துவான் திரு. கு. மதுரை முதலியார்,
(முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னை லயோலா கல்லூரி)

வைணவம் என்னும் சொல்லுக்கு விஷ்ணுவின் தொடர்புடையது என்றும், விஷ்ணுவே பரம்பொருள் என்னும் கொள்கையையுடைய தரிசனம் என்றும் பொருள் கூறலாம். தரிசனம் என்னும் வட சொல்லுக்குச் சமயம் என்பது பொருள். இம்மதம் தமிழ்நாட்டிற்கு இடையிலே வந்தேறியதன்று; மிக மிகப் பழமையானது என்பதைப் பண்டைத் தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்தோர் அறிவர்.

கடலால் சூழப்பெற்று விளங்கும் இந்நிலத்தை நானிலமாக வகுத்த ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியர், 'மாயோன் மேய காடுறை உலகமும்' எனக் காடு சார்ந்த நிலமான முல்லையையும், அதற்குரிய இறை வணகிய திருமாலையும் முதற்கண் வைத்துச் சிறப்பித்துள்ளதை அவர் இயற்றிய தொல்காப்பியத்து அகத்திணையியல் சூத்திரத்தால் அறிந்து மகிழலாம். அதனால் நானிலம் என்ற பெயரை இவ்வுலகம் பெறுவதற்கு முன்னரே திருமாலுக்கு உரிமையும் தலைமையும் ஊன்றிவிட்டன என்பதை அறிகின்றோம்.

முல்லை நிலத்திற்குரிய மக்களை ஆயர் என்று கூறுவர் தமிழர். இந்த ஆயர், தம் குலத்தில் வளர்ந்து விளையாடி, மக்களுக்குப் பற்பல நலன்களைச் செய்தருளிய கண்ணபிரானைத் தம் தொழு குலக் கடவுளாகக் கொண்டு போற்றிப் புகழ்ந்ததைத் தமிழ் மக்கள் நன்கறிவர்.

மாயோன் என்று தொல்காப்பியராலும், அவருடைய முன்னோராலும் குறிக்கப்பெற்ற இறைவன் கண்ணபிரானே. மாயோன் என்பதும் கண்ணன் என்பதும் கருநிறமுடையோன் என்ற பொருளினையுடையன.

இவ்வண்ணம் பழமை, தலைமைகளால் மட்டுமின்றி, இறைமைக் குணங்களால் நிறைந்து பொருள் சேர் புகழ் படைத்தோனும் திருமாலே யென்பது தொல்காப்பியர் துணிபு. அரசனைத் திருமாலோடு உவமிக்கும் பூவை நிலையைக் குறிக்குமிடத்து,

''மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்''

என அவர் கூறியுள்ளார். இங்கு இறைவனது ஈடும் எடுப்பும் இல்லாத புகழுக்கு 'மன், பெருஞ் சிறப்பின், தாவா விழுப்புகழ்' எனப் பல அடைமொழிகளைக் கூறிச் சிறப்பித்ததுபோல் வேறு எக்கடவுளரையும் அப்பெரும் புலவர் கூறாமை குறிப்பிடத்தக்கது.

வைணவர், தத்துவம் மூன்று எனக் கொண்டனர்: அவை சித்து, அசித்து, ஈசுவரன். சித்து என்பது உயிரையும், அசித்து என்பது உயிரல்லாத மற்றெல்லாப் பொருள்களையும், ஈசுவரன் எல்லாம் வல்ல இறைவனையும் குறிக்கும். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய அழிவில்லாத வெவ்வேறு பொருள்கள். எனினும், இவை மூன்றும் எக்காலத்தும் சேர்ந்தேயுள. இம் மூன்றனுள் இறைவன், சித்து,

அசித்து இரண்டனுள்ளும் அந்தர்யாமியாக வுள்ளான். இதுவே இவற்றின் நுண்ணிய நிலே உண்மை.

மூலப்பகுதி விரிவடைந்து, மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்புகளாகவும், மற்று முள்ள பொருள்களாகவும் ஆகின்றது. உயிர், தன்னுடைய புண்ணிய பாவங்கட்கேற்ப ஒவ் வோருடம்பை அடைகின்றது. அதுவே உயி ருக்குப் பிறப்பாகும். இறைவன், மூலப்பகுதி யின் விகாரமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் எல்லா உயிர்களுள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். இதுவே இவற்றின் உண் மையான பருநிலே.

மூலப்பகுதியின் விகாரமாகிய உடம்பிற்கு வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய விகா ரங்கள் உண்டு. அவ்வுடம்பிற்குள் இருக்கும் உயிருக்கு அத்தகைய விகாரம் இல்லே, ஆயினும் தான் செய்த புண்ணிய பாவங்கட்கு ஏற்ப உடம்பைப் பெற்றிருத்தலால், அவ்வுடம்பைப் பற்றிய இன்ப துன்பங்கள் உயிருக்குண்டு. இவ் வுடம்பினுள்ளும் உயிரினுள்ளும் அந்தர்யாமி யாகவுள்ள இறைவன், உடம்பினுடைய விகாரங்களேயும் உயிரினுடைய இன்ப துன்ப வுணர்ச்சிகளேயும் அடைவதில்லே.

இறைவன், வினே காரணமாக அன்றித் தன் விருப்பினுல் இவ்விரண்டனுள்ளும் அமைந் திருத்தலால், இவ்விரண்டின் தன்மைகளேயும் அவன் அடைவதில்லே. உயிர், மூலப்பகுதியின் விகாரமாகிய உடம்பைத் தனக்கு உடம்பாகக் கொண்டிருத்தல் போல, இறைவன் உடம்பு, உயிர் ஆகிய இரண்டையும் தனக்கு உடம் பாகக் கொண்டிருக்கின்முன். இவ்வாறு இம் மூன்று தத்துவங்களும் ஒன்றை விட்டொன்று பிரியாமல், எக்காலத்தும் தத்தம் இயல்பை விடாமல் ஒன்று சேர்ந்துள்ளன என்பது வைணவக் கொள்கையாகும். இக்கொள்கையை விளக்க, வைணவத்துறவிகள் மூன்று கோல்களே ஒன்ருகப் பிணேத்துக் கையில் ஏந்தியுள்ளனர். இதனே, 'முக்கோல்' என்று கூறுவர். துறவிகள் இவ்வாறு முக்கோல் ஏந்தும் வழக்கம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கிய வழக்க மாகவுள்ளது. தொல்காப்பியர்,

> "நூலே கரகம் முக்கோல் மணேயே
> ஆயுங் காலே அந்தணர்க் குரிய"...


என அந்தணர்க்கு முக்கோல் கூறினர். இங்கு அந்தணர் எனப்பட்டவர் முற்றத் துறந்த முனிவராவர். இவ்வாறு இன்றளவும் வைணவக் கொள்கைகளாகவுள்ள சித்து, அசித்து, ஈசு வரன் எனத் தத்துவம் மூன்று ஆகும், அதற்கு அறிகுறியாக முக்கோல் ஏந்துதலும் தமிழ்நாட்டின் மிகத் தொன்று தொட்ட வழக்கமாதலேக் காணலாம்.

இறைவன் உலகிற்கு முதற்காரணமாகவும் நிமித்த காரணமாகவும் துணேக்காரணமாகவும் உளன் என்பது வைணவச் சமயக் கொள்கை. சித்தும், அசித்தும் நுண்ணிலேயில் இருக்கும் பொழுது, அவற்றுள் இறைவன் அந்தர்யாமி யாக நிற்கும் நிலேயையே அவன் உலகிற்கு முதற்காரணன் என்றும்! நுண்ணிலேயில் இருக் கும் சித்து, அசித்துக்களே வெளிப்படுத்தி, உலகினே உண்டாக்குவோம் என்று இறைவன் எண்ணுகிற நிலேயையேஅவன் உலகிற்குநிமித்த காரணன் என்றும்; இறைவனுடைய ஞானம். சக்தி முதலியவை துணேக் காரணம் என்றும், இம் முறையில் இறைவன் உலகத் தோற்றத் திற்கு மூன்று காரணனுகவும் உள்ளான் என்று பேரறிவு படைத்த வைணவப் பெருமக்கள் முடிவு செய்துள்ளனர்.

வீடுபேறு என்பது யாது என்பது பற்றி வெவ் வேறுசமய நூல்கள் வெவ்வேறு வகையாகக் கூறும். ஆனுல், வைணவ சமயம் வீடு என்பது ஒரு தனி உலகம் எனக் கூறுகின்றது. இதுவும் தமிழ் நாட்டின் பழங்கொள்கையே யாகும். இது பற்றியே ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும்,

> "மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்"

என்ற குறளில் வீட்டை நிலம் என்ருர். அதனுல் 'வீடு' ஓர் உலகம் என்பதை அறி யலாம். வேறு பல குறட்பாக்களிலும் இக் கருத்தைக் காணலாம்.



சிங்காரவேலவர், சிக்கல், நாகப்பட்டினம்

# ஸ்ரீகண்ட சிவாசாரியர்

இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், B. A.,
சென்னை.

கூடியமா ணுக்கர்தமக்கு அறிவுகொளுத்திக்,
குடிலக் கொள்கை யோரைத்
தேடி, அவர் தமைவாதிற் புறங்காட்டிச்
செலத்தொலைத்துச், சிறந்த வாகை
சூடியநற் சித்தாந்த சைவமத
பானுவினைச், சுத்தாத் வைத
பாடியம்செய் தருளிய சீகண்ட
சிவாசாரியரைப் பணிந்து வாழ்வாம்!

—வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்.

சிவாகம நெறியாகிய சைவ சித்தாந்தத்தில் அகச்சமய வகைகளுள் தனிச்சிறப்புடையது சிவாத்துவிதம் என்னும் தத்துவக் கொள்கை. அஃது ஈசுவர ஐக்கியவாதம் என்றும், பாடாண முத்திவாதம் என்றும் இரு திறப்படும். பிரம்ம சூத்திரங்கட்கு வேதத்தையும் ஆகமத்தையும் ஆதாரமாகக் கொண்டு நீலகண்ட சிவாசாரியரால் எழுதப்பட்ட பாஷ்யம் என்னும் பேருரை சிவாத்துவிதத்தைத் தழுவியதாய் விளங்குகின்றது. இஃது ஏனைய சங்கரர், இராமானுசர் மத்துவர் ஆகியோர் இயற்றிய பேருரைகளுக்கு ஒத்த சிறப்புடையது. இப்பேருரையைத் தழுவியே பிற்போந்த அரதத்தசிவாசாரியர், அப்பைய தீட்சிதர் ஆகியோர், தம் நூல்களில் சிவாத்துவித தத்துவத்தை விளக்கியுள்ளார்கள்.

சிவஞான பாடியத்திலும், திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான சுவாமிகள், இதனை மேற்கோள் காட்டிச் சிவாத்துவிதத்திற்கும், சித்தாந்தத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.*

நீலகண்டரது காலமும், பிறந்த இடமும் தெளிவாக இன்னவென்று தெரிந்தில. நான்கு மாபாடியகாரர்களுக்கும் காலத்தால் முற்பட்டவர் இவர் என்று சிலர் கூறுவர். சங்கரரின் சம காலத்தவர் என்றும், சங்கரர் இவரை வாதில் வென்றார் என்றும், சங்கரர் திக்கு விஜயம் என்ற நூல் கூறுகின்றது. ஆயினும் இதுபற்றித் தெளிவான செய்தி ஒன்றும் புலனாகவில்லை. அப்பையதீட்சிதர் தாம் இயற்றிய சதுர்மத லேசசங்கிரகத்தில், பாடியகாரர்களைப்பற்றிக் குறிப்பிடுங்கால், ஸ்ரீகண்டர், பகவத் பாதர், இராமானுசர், ஆனந்ததீர்த்தர் என்று இந்த வரிசையில் கூறுகின்றனர். ஆயினும், இதுமட்டுமே முடிந்த ஆதாரமாகாது. அப்பைய தீட்சிதர் தமது ஆனந்தலகரியிலும், சிவாத்துவைத நிர்ணயத்திலும், ஸ்ரீகண்ட பாடியத்திற்குப் பிற்பட்டும், அதனைத் தழுவியும், இராமானுச பாடியம் அமைந்துள்ளதென்று குறிப்பிடுகின்றார்.

* சிவஞான சுவாமிகள் இப்பாடியத்தை நீலகண்ட பாடியம் என்று குறிப்பிடுவர். பக்கம் 24 சிவஞான மாபாடியம், சமாசப்பதிப்பு [1936]; தமிழ் நூல்கள் இவ்வாசிரியரை நீலகண்டாசாரியார் என்றும், வடமொழி நூல்கள் ஸ்ரீ கண்டாசாரியார் என்றும் குறிப்பிடுகின்றன

இராமாநுசர். போதாயனவிருத்தியைத் தழுவிப் பாடியம் எழுதினர் என்று கூறப்படினும், ஸ்ரீகண்டர் பிரமப் பொருளைச் சித்து - அசித்து - பிரபஞ்ச விசிட்டம் என்று கூறியுள்ளபடியால், இராமாநுசர் ஸ்ரீகண்டரின் விசிட்டக் கருத்தையே ஏற்று விளக்கியருளினர் என்று கூறுவாரும் உளர். ஆராயுமிடத்து, ஸ்ரீ கண்டர் தமது பாடியத்தில் சிவபரத்துவத்தைப் பிரகாசிக்கச் செயதுள்ளார் என்பது பிரசித்தம்.

"நமோஹம் பதார்த்தாய
அலாகானும் சித்தஹேத்யே
சச்சிதானந்த ரூபாய
சிவாய பரமாத்மனே"

என்பதனல், சிவனே பரம் என்றும், அவரே எல்லா வேதாகமங்களுக்கும் பொருள் என்றும், சச்சிதானந்த சொரூபி என்றும், பல இடங்களில் தமது பாடியத்தில் ஸ்ரீகண்டர் சிறந்தெடுத்துரைப்பர். மேலும் அவர், தாம் இயற்றிய பாடியம் மதுரம் - மகார்த்தம் - சுருக்கம் என்ற சிறப்புடையது-என்று கூறுகின்றார். மற்றும், இந்தப் பாடியம் சர்வவேத சாரம் என்றும், எல்லா வேத வித்துக்களும் சிவநிஷ்டர்களும் பெருநிதியாகக் கொள்ளத் தக்கது என்றும் குறிப்பிடுகின்றார். ஆனல் தாம் ஒரு புதிய தரிசனத்தை ஏற்படுத்தியதாகத் தம்மைப் பற்றி ஸ்ரீகண்டர் கூறிக் கொள்ளவில்லை. வேதங்களும் ஆகமங்களும் ஒப்பத்தகும் பொருளே இப்பாடியத்தில்அடங்கியுள்ளது என்பது குறிப்பு. மற்றைய மூன்று பாடியக்காரர்கள், ஆகமங்களைப் பயன் படுத்தவில்லை, ஆதலின், இப்பாடியத்தினை வேதாகமோக்தமானது எனச் சான்றோர் கொள்வர். ஸ்ரீகண்டர், சாதன சதுட்டயத்தால் அன்றிப் பிரம்ம ஞானம் கைவரப் பெறுது என்று கூறுகின்றார். நித்தியாநித்திய வஸ்து விவேகம், சமதமாதி சாதனசம்பத்து.இகமுத்திரார்த்தபர போகவிராகம்,முமுட்சுத்துவம் ஆகிய நான்கும் பிரம்மஞானம் அடைவதற்குரிய சிறந்த சாதனங்களாகும் என்று, இவர் வற்புறுத்துகின்றார்.

ஸ்ரீகண்டர் சங்கரருக்குப் பிற்காலத்தவரும் இராமாநுசருக்குச் சமகாலத்தவருமாக இருக்கலாம் என, ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இஃது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகக் காணப் படுகின்றது.

ஸ்ரீகண்டர் தென்னுட்டவர் என்பது திண்ணம். அப்பைய தீட்சிதர் அவர்கள் சின்ன பொம்மன் (கி. பி. 1549 - 1578) என்ற அரசரின் ஆணைப்படி, ஸ்ரீகண்டபாடியத்துக்குத் தாம் உரைகண்டதாகக் கூறுகின்ருர். இவ்வரசர் தேசாபிமானத்தால் அவ்வாறு கூறியிருக்கலாமாதலின், ஸ்ரீகண்டர் தமிழ் நாட்டவவரேயாவர் என ஊகிக்கலாம். இவர் தம் திருவுருவப் படிமம், வடதிருமுல்லைவாயில் கோயிலில்காணப்படுவதனுல் இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர் என்று ஒருவாறு கொள்ளலாம். இவர்தம் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புக்கள் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. வேதங்களோடு ஒப்ப ஆகமங்களுக்கும் இவர் முதன்மை அளிப்பதனுல், இவர் ஆதி சைவ அந்தணராக இருத்தல்கூடும் என்று தோன்றுகின்றது. தமது குரு சுவேதாசாரியார் என்று இவர் குறிப்பிடுகின்ருர். இந்த சுவேதாசாரியார், சுவேதவனப்பிள்ளையார் என்னும் ஆசிரியர் மெய்கண்டார் (கி. பி. 13 - ஆம் நூற்றுண்டு) அல்லர் என்பது தேற்றம்.

தமது குருவை இவர், எல்லா ஆகமசாத்திரங்களையும் கற்றவர் (நானு ஆகம விதாயினி); வீட்டின்பத்தை எல்லோருக்கும் சித்திக்கச் செய்பவர்(கைவல்ய கல்பதரு); மங்கலத்தையே செய்யும் ஆசிரியர் (கல்யாணகுரு) என்று புகழ்கின்ருர்.

அப்பையதீட்சிதர், இதைத்தமது சிவார்க்க மணி தீபிகையில் விளக்கும்போது, முறையே வேதாகமங்களை முரணின்றி உணரவல்லவர், பேதம் இன்றி அனைவருக்கும் மோட்சத்திற்குரிய வழிகாட்டுபவர், இம்மை மறுமை நலன்களைத் தரவல்லவர் என விளக்குகின்ருர்.

ஸ்ரீகண்டரின் பாடியத்துக்கு நான்கு சிற்றுரைகள் உண்டு. அவை அப்பைய தீட்சிதரின் 'சிவார்க்கமணி தீபிகை'-நிஜகுணயோகியாரின் 'தாராவளி'-அரதத்த சிவாசாரியரின் ஸ்ரீகண்ட பாஷ்யசமர்த்தம்'-பிரம்ம வித்யாத்வரீந்திரரின் 'வேதாந்த சர்வஸ்வ சிவதர்ப்பணம்' என்பன.

இவற்றுள் இப்போது கிடைப்பது 'சிவார்க்க மணிதீபிகை' ஒன்றே. மற்றும் இவர் தம் பாடியத்தின் மூலபாடமும், கிடைப்பது அரிதாக உள்ளது. காசிவாசி செந்தில நாதய்யர் அவர்கள் இயற்றிய தமிழ்மொழி பெயர்ப்பு இப்போது கிடைப்பதில்லை. திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்களும், திரு. மகாதேவ சாஸ்திரியார் அவர்களும், 'சித்தாந்த தீபிகை' இதழில் இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்புச் செய்தார்கள். அதைத் தொகுத்துத் தனி நூலாகக் கிடைக்கும்படி அச்சிடுதல் நலம் பயக்கும். சமீபத்தில் (1930), டாக்டர் ரோமா சவுத்திரி அம்மையார் என்பவர், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கல்கத்தாவில் வெளியிட்டுள்ளார். சைவமும் அத்வைதமும் துலங்கும் தமிழ் நாட்டில் இனியாவது ஒரு நல்ல பதிப்பு வெளிவரவேண்டும்,

ஸ்ரீகண்டரின் திருநட்சத்திரம் மாசி கிருஷ்ணபட்சம் சப்தமி என்பர். ஆவணி புஷ்யம் என்று சொல்பவரும் உண்டு. ஸ்ரீகண்டரின் திருவுருவப்படிமம், தேவார வைப்புத் தலங்களுள் ஒன்றும், ஆகமங்கள் சிலவற்றை அச்சிட்ட கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் அவர்கள் சுமார் 80 ஆண்டுகட்கு முன்னர்த் தருமகர்த்தாவாக இருந்ததும் ஆகிய சென்னைத் திருவல்லிக்கேணித் திருவேட்டீசுவரன்பேட்டைக் கோயிலில், மூல விக்கிரக மாகவும், உற்சவ விக்கிரகமாகவும், அன்பர்கள் கண்டு தரிசிக்க உள்ளது.



சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கல்

உமாதேவியார் மயில் உருவத்தில் பூசை செய்தல்

வாயிலார் நாயனார் மனக்கோயிலில் இறைவனை வழி

திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் தல வரலாற்று ஓவியம்.

# "ஆழ்வார் விடுத்த வினு"

[ திரு. என். எஸ். தாத்தாசாரியர், தஞ்சாவூர். ]

**முன்னுரை :**

மயர்வற மதிநலம் அருளப் பெற்று, மாலுகந்த ஆசிரியர்களான ஆழ்வார்களின் தொகுப்பை, ஓர் உருவாக்கி அவ்வுருவம் தன்னுள், உயிர் நிலையில் இருப்பவர் நம்மாழ்வார் என்பர் பெரியோர். ''ஆராவமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்'' என்றெல்லாம் ஆழ்வார் எம்பெருமான் பக்கலில் பாடிய பாசுரத்தைப் பின்புள்ளோரான நாம் ஆழ்வார் பக்கலில் பாடவேண்டும்படி அன்றோ ஆழ்வார் பெருமை இருப்பது. அத்தகைய ஆழ்வாரின் இறைப்பற்றும், மடை திறந்த அனுபவப் பெரும் வெள்ளமாகிய இன்றமிழும், நம்மை நினைக்கும்தொறும் சொல்லும்தொறும் நெஞ்சு இடிந்துகச் செய்யும். செவி மடுத்துப் பருக உள்ளமெல்லாம் தித்திக்கும்.

இவரது திருவாக்கின் சிறப்பினை எடுத்தியம்பிய பெரு வள்ளல் ஸ்ரீவேதாந்த தேசிகனுர், ''பழைய மறைகளின் திரளில் உன்ன முத வாக்கு முன் நிற்பதன்றோ'' என்று அருமையாக உணர்த்தினர். பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் ''அருமறை துணிந்த பொருள் முடிவை இன்சொல் அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பி'' எனக்கூறி, ஆழ்வார் திருவாக்குப் பெற்றதும் அரங்கன் திருத்தோள்கள் உயர்ந்தன என்கிறுர். இவரிடம் பாடல் கேட்கவும், இவர் ஏசலை ஏற்கவும், ஊடலை அனுபவிக்கவும், கேள்வியைச் செவிகொண்டு கேட்கவும், திருநாட்டினின்றும் (ஸ்ரீவைகுந்தத்திலிருந்து) பாம்பணையுடன் புறப்பட்டுக் காவிரி உள்ளம் உகந்தான்.

**ஆழ்வாரின் நாவீறு :**

அன்னங்களின் நடுவே சோலைக்கிளியாய், ஆழ்வார்களின் குடிக்கொரு மகளாய் அவதரித்த ஆண்டாள் நாச்சியார், தமது திருப்பாவையில் வரும் ''உங்கள் புழைக்கடை'' என்ற 14-ஆம் பாசுரத்தின் துவனிப் பொருளில் நம்மாழ்வாரைப் பள்ளி உணர்த்தினுள் என்பர், பாகவதானுபவ ரசிகர். திருப்பாவைக்குப் ''பாகவதத்திருப்பள்ளி எழுச்சி'' எனவும் பெரியோர் பெயரிட்டனர். அப்பாடலின் ''நங்காய்! நாணுதாய்! நாவுடையாய்! எழுந்திராய்'' என்ற மூன்று விளிச் சொற்களில் ''நாவுடையாய்'' என்ற சொல் ஆழ்வாரைக் குறிக்கவே இட்டுப் பிறந்த சொல்லாக அமைந்தது. இதனை ஆழ்வாரின் நாவன்மையைப் பருகப் பாக்கியம் பெற்றவர்கள் நன்கறிவார்கள். ''என் நாவில் இன் கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்'' எனும்படி ஆழ்வார் தம் நாவினிமையும், வன்மையும் அமைந்தன. திவ்விய கவி ''மறைப்பாற் கடலைத் திருநாவன் மந்தரத்தால் கடைந்து'' என்றும்; நிகமாந்தமகாதேசிகன் ''அணி குருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன'' என்றும் போற்றினுர்கள். எம்பெருமானும் அதிவேட்கை கொண்டவன் நீரிலே நின்று நீர் பருகுவான் போல் ஆழ்வார் நாவினுள்ளேயே இறங்கி அமர்ந்து விட்டானும். ''என்னுடைய நாவினு

ளானே" "என் நாமுதல் வகுந்து புகுந்து" என்றல்லவோ, தன் நாவில் இறைவன் மறைந்த ரகசியத்தை வெளிப்படுத்தினுர் ஆழ்வார் !

அதனுல்தான் ஆழ்வாரை "நாவீறுடைய பிரான்" எனப்போற்றினுர்கள். இவர் திரு வாய் கொண்டு இறைவனுடன் பேசுவதையும், கூசுவதையும், புகழ்வதையும், பழிப்பதையும் விளிப்பதையும், வினுவிடுப்பதையும் ஆழ்ந்து நின்று அனுபவித்தால், நாம் மதி எல்லாம் உள் கலங்கிக் காலாழ, நெஞ்சழியக் கண்சுழல நிற்கவே நேரும்.

## பெரிய திருவந்தாதி :

நம்மாழ்வார் அருளிச் செய்ததாய், அதர் வண வேதத்தின் சாரமாய், அவர் அருளிச் செய்த நான்கு பிரபந்தங்களில் மூன்றுவதாய் உள்ள, இயற்பா என்ற மூன்றுவது ஆயிரத்தின் ஏழாவது பகுதியாய், 87 பாசுரங்கள் கொண்ட அந்தாதி நூலாய், அமைந்திருக்கும் பெரிய திருவந்தாதியில் 75-ஆம் பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானிடம் வினுவிடுக்கும் அழகும், அவ்வினுவினுல் அமைந்த சாத்திர நுட்பக்கருத் தும், மற்ருேர் நாவினில் அமையாதது என லாம். அப்பாசுரத்தில் ஆழ்வார் விடுத்த வினு வானது தமிழ் நன்னூல் துறை வகுத்த அறு வகை வினுக்களில் "அறிவினு"வின் பால் பட்டது எனலாம்.

ஆசிரியர் சீடனை விடுக்கும் வினுவன்ருே அது. இந்நிலையில் ஆழ்வார் ஆசிரியராகவும், எம்பெருமான் சீடராகவும் ஆனுர் போலும், இதுதான் கருணையங் கடலான நம்மப்பனின் எளிமை ! நம் மண்ணலின் பெருமை ! "என்னை வாரமாக்கிவைத்தான், வைத்ததன்றி என்னுள் புகுந்தான்" என்று நம்பாணநாதன் பணித்த படியும், "வந்தாய் என்மனம் புகுந்தாய் மன்னி நின்ருய்" எனத் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்தபடியும், உள்ளே உறைவதும், வெளியே மறைவதும் அவன் திருவிளையாடல். பக்தர்களின் உள்ளம் என்ருல் அவனுக்கு உகந்த மெத்தென்ற பஞ்சசயனமாகும், "ஞானுதிகருடைய இருதயங்களில் சுகப்பரி சத்தாலே எம்பெருமான் கண்வளருக" எனத் திருப்பாவை உரையில் ஆசிரியர் கூறினுர்.

இப்பெரிய திருவந்தாதியானது, தமிழ் நூலார் கூறும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றுனதாய், "விருந்து" என்று அழைக்கப் படுவதாய் உள்ள அந்தாதி நூலுக்குள்ள, இலக்கண அமைதி நன்கு அமையப் பெற்ற நூலாகும். காலத்தினுல் முற்பட்ட ஆழ்வார் களால் பாடப் பட்டதாய், நூறு பாசுரங்கள் எண்ணிக்கை கொண்டதாய், கற்ருேர் காமுறும் வண்ணம் அமைந்ததாய் உள்ளது. முதலாழ்வார்களான மூவர்களின் நூற்றந்தாதி களுக்கும் இல்லாத "பெரிய திருவந்தாதி" என்ற சிறப்புப் பெயர், இதற்கு மட்டும் ஏற் பட்ட காரணத்தைப் பெரியோர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். எண்ணிக்கையில் சிறுமை யும், சிறப்பில் பெருமையும் கலந்த இந்நூல் ஒரு "சிறுமா நூல்" ஆகும் என்னத் தட்டில்லை.

ஒருக்கால், "உறுமோபாவியனுக்கு" என்ற எட்டாம் பத்து, பத்தாம் திருவாய் மொழி, மூன்ரும் பாசுரத்தில் ஈற்றடியில் வரும் "சிறுமாமனிசராய்" என்ற சொல்லின் பொருந்தாமையைச் சந்தேகப்பட்ட பட்டர், தமது திருத்தகப்பனுரிடம் விண்ணப்பிக்க, தகப்பனுர் ஆகிய கூரத்தாழ்வான் "இது ஒக்கும்" எனக் கூறி விடை அளிக்கும் காலையில் பெரியோர்கள் மனிதர்களோடு ஒக்கப்பிறந்து, உருவத்தால் சிறுமை பெற்றதால் சிறுமனிதர் என்றும் எம்பெருமானின் அனுபவநிலையில் விண் ணுளாரினும் பெருமை பெற்றதினுல் "மாமனி சர்" என்றும் ஆவர். ஆகவே அவர்களைச் "சிறுமாமனிசர்" என அழைக்கத் தட்டில்லை என்ருர் என்ற ஐதிகத்தை நினைப்பது, அடியார்களைச் 'சிறுமா மனிசர்' என அழைப் பது வைணவ மரபு.

## பாசுரச்சிறப்பு :

"புவியும் இருவிசும்பும் நின் அகத்த. நீ என்
செவியின் வழிபுகுந்துஎன் உள்ளாய். அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யார்அறிவார்
ஊன்பருகு நேமியாய் உள்ளு"

திருவாழியைக் கையில் ஏந்தி நிற்கும் பரம புருடனே ! இம்மண்ணுலகமும், விசாலமான வைகுந்தமும், உன்னிடத்தே உள்ளன. இரு நிலங்களையும் உள்ளே அடக்கிவைத்துக் கொண்

டிருக்கும் பிரமம் என்றுபெயர் பெற்ற நீ, என் காதுவழியே புகுந்து ஒருநாளும் என்னைவிட்டு நீங்காமல் என் உள்ளத்தே நின்றாய். இப்பொழுது எல்லாவற்றையும் விடப்பெரியது என்ற பொருள் கொண்ட பிரமம் என்ற பெயர், யாருக்குத்தகும் என்பதனை யார் அறிவார்? நீ விடையிறுப்பாய்'' என்பது இப்பாசுரத்தின் பொழிப்புரை. அன்று அசோதையின் உரலில் ஆப்புண்டு கிடந்த மாயன் கண்ணன், இன்று ஆழ்வார் திருவுள்ளத்தில் தாமே வலுவில் ஆப்பு இட்டுக் கொண்டான் போலும். இப்பாசுரத்தில் ஆழ்வார் தம்மை இறைவனைவிடப் பெரியவன் என்று சமத்காரமாகப் பேசினதால், இப்பாசுரத்தை உள்ளீடாகக் கொண்ட இந்த நூல், பெரிய திருவந்தாதி ஆயிற்று எனவும், பெரியோர் பொருளுரைப்பர்.

இதற்கு முந்திய பாசுரத்தில், ஆழ்வார் எம்பெருமானிடம் ''ஒன்றும் இரங்கார் உருக்காட்டார்'' என்று குறைப்பட்டார்; உடனே எம்பெருமான், ஆழ்வீர்! வம்மின்? உகந்தருளின இடமெல்லாம் (108 திருப்பதிகளையும்) விட்டு, உம்முடைய நெஞ்சிலன்றோ, நாம் என்றும் நிலைத்திருப்பது'' எனத் திருவாக்கிட்டார். இதனையே ஆழ்வாரும் ''நெடியான் நிறம் கரியான் உள்புகுந்து நீங்கான் அடியேன் உள்ளத்தகம்'' என்ற அடியால் வெளியிட்டருளினர். பெருமான் விடையிறுத்த பின்பு உடனே ''புவியும் இருவிசும்பும்'' என்ற பாசுரம், ஆழ்வார் திருநாவில் வெள்ளம் பாய்ந்தது.

## வினவும் விடையும் :

திருமங்கை மன்னனின் உள்ளத்தில் புகுந்த திருவேங்கடவன், புகுந்த வழிகாட்டாமல் அவர் உள்ளத்திலே புகுந்தான். அதனால்தான் திருமங்கை ஆழ்வார் ''வந்தாய் என் மனம் புகுந்தாய்'' என்ற மட்டிலும் எடுத்தியம்பினர். ஆனால், ஆழ்வார் தம் உள்ளத்தில் நுழையும் கள்வன் ஆகிய மாயனை அடிச்சுவட்டுடன் கண்டு, நிறுத்திப் பேசலுற்றார். இது ஒரு சிறப்பு. இறைவன் இரு உலகங்களையும் உள்ளே கொண்ட நிலையில். ஆழ்வார் இறைவன் திரு வயிற்றில் தானே இருக்கவேண்டி இருக்கும். அவ்வமயம் வெளியில் தாம் தனித்து நிற்பதாயும், தம் உள்ளத்துக்குள்ளே எம்பெருமான் புகுந்துவிட்டார் என்றும் ஆழ்வார் கூறுவது எங்ஙனமோ என ஐயம் எழலாம்.

இந்த இடத்தில் மிக அருமையான சாத்திர நுட்பத்தை ஆழ்வார் நமக்கு உபதேசிக்கின்றார். ''என் உள்ளம்'' என்ற சொல்லானது, பகவானுடைய ''அந்தர்யாமி' நிலையை உணர்த்துவது; ''புவியும் இருவிசும்பும் நின்னகத்த' என்ற சொல்லானது, எங்கும் சூழ்ந்து அகன்று ஆழ்ந்து முடிவில்லாப் பரம்பொருள் நிலையை அதாவது உயிரினங்கள் யாவற்றிலும் கடந்தும், கிடந்தும் இருக்கும் நிலையை உணர்த்திற்று எனலாம்.

---

## " தொழுமின் நீர்கொடுமின் கொள்மின் "

பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்,
இழிகுலத் தவர்க ளேனும்
எம்அடி யார்கள் ஆகில்,
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்
என்றுநின் னோடும் ஒக்க,
வழிபட அருளி னய்போன்ம்
மதிள்திரு அரங்கத் தானே!

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

158578

# "மாற்றி நின்றார் வழி"

[ சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,

தேவகோட்டை. ]

கடவுள் உயிர்களின் காட்சிக்கு அருமையாய் இருப்பவர். ஆனால் அவர் எவ்வாற்றாலும் காண முடியாத சூனியர் அல்லர். அவரையே கருதியிருந்து அவரின் வேறாகாது விளங்கும் சிவஞானியர்க்கு, அவர் மிக எளியவராக நிற்பார். ''காண்டற்கரிய கடவுள் கண்டாய், கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்'' என்பதும் ''காட்டு வித்தால் ஆரொருவர் காணாதாரே, காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே'' என்பதும் முதலிய அருண்மொழிகள், கடவுளது அருமை எளிமைகளைச் செவ்விதிற் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. உயிரறிவுடன், கடவுளறிவும், ஒன்றுபட்டுக் கூடினாலன்றி, உயிர் எதனையும் அறிய முடியாது. புறப்பொருள்களை அறியும் கண்ணொளியுடன், கதிரவன் ஒளியும் ஒன்றுபட்டு, உடன் கூடினாலன்றிக் கண் எதனையும் காணமுடியாதிருப்பது கொண்டு, இவ்வுண்மையை அறிந்து கொள்ளலாம்.

கண்ணொளியோடு மட்டும், கதிரவன் ஒளி சேர்ந்திருந்து, காணப்படும் பொருளுடன் அது கலக்காதிருக்குமாயின், அந்த வேளையிலும், கண் பொருளைக் காணமாட்டாது. காண்பவனது கண்ணொளியுடன் கூடித் தானும் உடனிருந்து, காணுகின்ற கதிரவனது ஒளி, காணப்படுகின்ற பொருளிடத்தும் கலந்து நின்று, அதனைக் காட்டுகின்ற உதவியையும் செய்தல் வேண்டும். இங்ஙனமே கடவுளும், உயிர்களின் அறிவுடன் கலந்திருந்து எல்லாவற்றையும் காணுபவராகவும், காணப்படும் எல்லாப்பொருள்களுடனும் கலந்திருந்து, அவற்றைக் காட்டுபவராகவும், உதவிபுரிந்து வருகின்றார். இதனைச் சித்தாந்த சைவ நூல்கள் ''காணும் உபகாரம் காட்டும் உபகாரம்'' என்று இரண்டு வகைப்படுத்திச் சொல்லும்.

அறிவுமயமாகிய ஆன்மா, அநாதியே பற்றிய ஆணவ மலத் தொடர்பினால், அவ்வறிவுத் தடையையும், அநாதியே உடையதாக இருக்கின்றது. ஆணவமலம் இதற்குரிய ஆவாரக சக்தி என்னும் மறைப்புச் சக்தியைக் கொண்டு, ஆன்மாக்களின் அறிவிச்சை செயல்களை அநாதியே மறைத்திருப்பதனால், அறிவு வடிவமாகிய சித்துவகையைச் சேர்ந்த ஆன்மாக்கள், அறிவற்ற சடப்பொருள்கள் போலக் கேவல காலத்தும் அல்லலுறுகின்றன. கேவல நிலையிற் சடம்போல அறிவிழந்து கிடந்த உயிர்களினிடத்துச் சிவபெருமான் பேரிரக்கங்கொண்டு, சகல நிலையில் அவைகளை நிறுத்திக் காணுவதும், காட்டுவதுமாகிய உதவிகளைச் செய்து இடையீடின்றி அவற்றுடன் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இருந்தருளுகின்றான்.

இங்ஙனம், எந்த வேளையிலும் பிரிப்பின்றிக் கலந்திருக்கின்ற இறைவனை, உயிர்கள் காண முடியாமலிருப்பது விந்தையேயாகும். பொருள்கள் புலப்படாமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கக்கூடும். ஒன்று பொருள்

களின் இன்மை; மற்றொன்று அவையிருந்தும் காணும் ஆற்றல் காண்பார்க்கு இல்லாமை; இவ்விரண்டனுள், கடவுளைக் காணமுடியாமைக்குக் காரணம் பின்னையதேயாகும். காண வேண்டும் பொருளாகிய கடவுளைக் காண்பவனாகிய ஆன்மா காட்டுங் கருவியாகிய திருவருளைத் துணைகொண்டு காணமுயன்றால், வெற்றி உறுதியாகக் கிட்டும். ''காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டு, பர வீட்டின்ப மெய்ப்பொருளை மேவும் நாள் எந்நாளோ'' என்பது தாயுமானவ அடிகள் திருவாக்கு.

திருவருளைத் துணையாகக் கொண்டு காண்பார்க்கன்றிச், சிவபெருமான் புலப்படுவதில்லையாகையால், அவனது நுண்மையைத் தேர்ந்து தெளிபவர் மிகச் சிலராகவே யிருக்கின்றனர். அத்தகைய தெளிவை அடைந்தவர்களின் வழியிலேயே, அவன் இடையீடின்றி நிலை பெற்று நின்றருளுவான். இதனைத் திருமூல தேவநாயனார், தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்தில் இருபத்து நான்காவது செய்யுளாகிய,

"போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனிதன் தன்னடி
தேற்றுமின் என்றும் சிவனடிக் கேசெல்வம்
ஆற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே''

என்பதில் தெளிவுபடுத்துகின்றார்.

சிவபெருமானது திருவடியன்றிப், புகலிடம் பிறிதொன்றில்லை என்னும் உறுதி, பலகோடி பிறப்புக்களிற் செய்த புண்ணிய மிகுதியினாலேயே உண்டாகும். அவ்வாறு தேடிச் சேர்த்த புண்ணிய மிகுதியை உடையவர்களே. சிவபெருமானுடைய திருவடிகளைச் சரணடைந்து போற்றுவார்கள். ஓதவேண்டிய முறைப்படி, ஒலி பிறழாமல் அவனது மந்திரங்களை ஓதுவார்கள். அளப்பரிய அவனது பெரும் புகழை உளங்குளிர எண்ணி உவகையுறுவார்கள். இங்ஙனம் மெய், மனம், மொழி ஆகிய திரிகரணங்களையும், சிவபெருமானது திருவடிக்கண் நிலைபெற வைத்தமையாலேயே, சிவஞானிகள் என்றும் தெளிவுடையவர்களாய் வாழ முடிகிறது. அந்தத் தெளிவு அனைவருக்கும் வர வேண்டுமென்று ஆசிரியர் திருமூல தேவர் ''போற்றிசைத்தும் புகழ்ந்தும் புனிதன்னடி தேற்றுமின் என்றும்'' எனமுதற்கண் குறித்தருளினார்.

இங்கே சிவபெருமான் ''புனிதன்'' என்று குறிக்கப்பெற்றார். அவரல்லாத மற்ற எல்லாப் பொருள்களும் இயல்பாகவே புனிதமற்றனவாகவும், புனிதமற்றவற்றைச் சார்ந்து புனிதம் இழந்தனவாகவும் இருப்பன. அவரொருவரே எக்காரணத்தினாலும் மாறுபடாத புனிதத் தன்மையை இயல்பாகவே உடையவராயிருக்கின்றார். மேலும் அவர் தம்மைச் சார்ந்த அனைத்தையும் புனிதமாக்கும் தனிச் சிறப்புடையவராயும் விளங்குவது இங்கே நினைவு கூரத் தக்கதாகும்;


சிவமே பொருளெனத் தெளிந்த மெய்யன்பர்களுக்கு, உலகத்துப் பொருள்களைப்பொருள்களென்று கருதும் விபரீத உணர்வு விலகிவிடும். ''கொன்றைத் தொங்கலான் அடியார்க்குச் சொர்க்கங்கள் பொருளலவே'' என்பது திருமுறை. மெய்யடியார்கள், தம்மிடம் வந்தடைந்த செல்வத்தையெல்லாம், சிவபெருமான் தந்தவை என்று தெளிந்து, அவற்றை அவனது திருவடிக்கேஆக்குவார்கள். ''தேடிய மாடும் நீடு செல்வமும் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும்'' என்பார் சேக்கிழார் பெருமான்.

செல்வப் பற்றைச் சிவனடிப் பற்றாக மாற்றிக் கொண்டவர்களே; மயலற்ற சிந்தையாக மாற்றிக் கொண்டவர்கள் ஆவார்கள். பசு புண்ணியத்தின் பயனாக வந்த பொருளைப் போகநுகர்ச்சிக்கும், மேலும் பசு புண்ணியப் பேற்றிற்கும் செலவிட்டுப் பிறவிப் பெருங்கடலிலேயே மூழ்கித் தத்தளிக்க மெய்ஞ்ஞானியர் விரும்பார். ''செல்வத்துப் பயன் சிவபுண்ணியப் பேறே'' என்று தெளிந்து, சிந்தை மயக்கறுத்தவர்களின் வழியிலேயே, சிவபெருமான் நிலைபெற்று வீற்றிருப்பான், இவ்வுண்மை இத்திருப்பாடலின் பிற்பகுதியால் அறியக் கிடக்கின்றது.

நலமே தழைக



எட்டிகுடி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் திருமண மண்டபத்திற்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு. கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் கால்கோள் விழா நிகழ்த்துதல் (8-3-70).



நாச்சியார் கோயில், ஸ்ரீ சீனிவாசப் பெருமாள் கோயிலில், கலியாணமண்டப வளர்ச்சி வேலைகளை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு. கே. வி. சுப்பையா B. A.** அவர்கள், துவக்கிவைத்தல் (1-3-70)

# கருவூர்த்தேவர்

( ந.ரா. முருகவேள், M. A., M. O. L. )

## முன்னுரை :

இராசராசசோழன், தமிழ்நாட்டில் அரசு செலுத்திய எண்ணற்ற பல அரசர்கள் எல்லோரிலும், தலைசிறந்த ஒரு பேரரசன் ஆவான். உலக வரலாற்றில் அவனுக்கு நிகரான, சிறந்த பேரரசர்கள் ஒரு சிலர் மட்டுமே இருந்திருத்தல் இயலும் எனலாம். 'இனி யார் உளரோ? முன்னும் இல்லை!' என்னும் நிலையில் இராசராச சோழன், ஒப்புயர்வற்ற பேரரசனாகச் சிறந்து விளங்கினன். உலகத்திலேயே 'கோயில்கள் அமைக்கும் திறனில், ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்பவர்கள் தமிழர்களே ஆவர்' என அயல் நாட்டு அறிஞர்களும் அகமகிழ்ந்து போற்றிப் பாராட்டும் நிலையில், தஞ்சைப் பெருவுடையார் (பிருகதீசுவரர்) கோயிலை எடுப்பித்த இராச ராசசோழனின் அருமைபெருமைகள் அளப் பரியன.

## கருவூர்த்தேவர் :

இத்தகைய இணையற்ற பேரரசன் ஆகிய இராசராசசோழனின் பெருஞ்சிறப்புகளுக்குக் காரணர்களாக விளங்கியவர்களுள், இருவர் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். ஒருவர் செம்பியன் மாதேவியார், மற்றொருவர் கருவூர்த்தேவர் எனலாம். செம்பியன் மாதேவியார், இராசராசசோழனை இளமையில் இனிது வளர்த்து, அவன் நற்குண நற்செயல்களைப் பெற்று விளங்குமாறு, அன்புடன் பழக்கிப் பயிற்சி அளித்தவர் ஆவர். கருவூர்த்தேவரோ, இராசராசசோழனுக்கு அருளுரைகளும், அறிவுரைகளும் வழங்கி ஆசி அளித்து, அப் பேரரசனைச் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொண்டருளிய பெருந்தகையார் ஆவர்.

## சிவபாத சேகரன் :

அருள்மொழித்தேவன் என்னும் இயற் பெயர் கொண்டிருந்த இப்பேரரசன், தனது வீரத்தாலும் போர்த்திறத்தாலும் பகைவர்கள் பலரை அடக்கி, வெற்றிகள் பலபெற்று, இராசராசசோழன் எனப் பலரும் பாராட்டும் வண்ணம், பெரும்புகழ் அடைந்து விளங்கி இருந்தான். அந்நிலையில் அவன் அகந்தையும் செருக்கும் அடையாமல்,

'' வாழ்வெனும் மையல் விட்டு,
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடு,
சைவமாம் சமயரும் சாரும்
ஊழ்பெறல் அரிது; சால
உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப்
போற்றுவார் அருள்பெற் றாரே ''

எனச் சிவஞான சித்தியார் என்னும் செந் தமிழ்த் தத்துவ விளக்க நூல் கூறுமாறுபோல, அவனைத் தாழ்வெனும் தன்மையோடு சைவ

---

சென்னைத் திருமயிலையில் நிகழ்ந்த இந்துதர்ம மன்றத்தின் ஆண்டு விழாவில், இராசராசன் சதயத் திருவிழாவில், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் பேசியது. (22–3–70)

—ஆசிரியர்.

மாம் சமயம் சாரும் [ஊழ் பெறவைத்து உய்யக் கொண்டு, அவன் "சிவபாத சேகரன்" என்னும் சிறப்பு அடையும்படி செய்தருளியவர், கருவூர்த் தேவரே என்றல் பொருந்தும். இராசராசன் இவரைத் தனது ஞானசிரியராகவும், அரசியல் அறிவுரையாளராகவும் ஏற்றுப் போற்றி மதித் தொழுகி வந்தான் என்று தெரிகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலிற் கருவறையின் உட் புறச்சுவரில், கருவூர்த்தேவர் இராசராசனுக்கு ஏதோ அறிவுரை கூறுவது போலவும், அதனை அவன் பணிவன்புடன் கேட்பது போலவும், குரு சிஷ்யபாவ முறையில் வரையப் பெற்றிருக்கும் அழகோவியம், இதற்குச் சான்றுபகரும்.

## அரசரும் ஞானிகளும் :

மேலை நாட்டுப் பேரறிஞர் ஆகிய பிளேட்டோ (கி. மு. 427—347) என்பவர் "அரசியற் பெருந்திறனும், தத்துவ உணர்வின் ஆற்றலும் ஒருங்கே உடனியைந்து கலந்த நிலையில், **ஞானிகள்** அரசர்களாகவோ அல்லது **அரசர்கள்** ஞானிகளாகவோ மாறிநின்றால்தான் உலகமானது உய்ந்து துன்பங்கள் நீங்கி வாழ்வும் வளமும் பெறுதல் இயலும். அரசியல் ஆள்வினைத் திறனும், அருள்ஞான மெய்யுணர்வும் ஒருங்கு இயைந்து கலந்து நின்றால் அன்றி, உலக மக்களுக்கு உய்தியே இல்லை. இவை இரண்டினுள் ஏதேனும் ஒன்றைப் புறக்கணித்துவிட்டுப் பிறிதொன்றினை மட்டுமே கைக்கொள்ளும் இழிகுண மாக்களை ஆட்சிப் பொறுப்பினின்று ஒதுக்கித் தடுத்து நிறுத்தினாலன்றி மனித குலத்திற்கு உய்தி ஏற்படாது," என்று கூறிப் போந்தார்.

அவர்தம் கூற்றின்படி, அரசர்கள் ஞானிகளாகவோ, ஞானிகள் அரசர்களாகவோ மாறி அமைவதற்குப் பெரும்பாலும் வாய்ப்பு நேர்வதில்லை. எப்போதோ ஒரு சமயம் தான் ஜனகரும், மார்க்கஸ் அரேலியரும் போன்றவர்கள் தோன்றக்கூடும். அரசர்கள் ஞானிகளாக ஆக முடியாது. ஞானிகள் அரசர்கள் ஆக இணங்க மாட்டார்கள். இந்நிலையில் உலகம் துன்பங்கள் நீங்கி, அமைதி ஏற்பட்டு உய்ய வேண்டுமாயின், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அரசர்கள் ஞானிகளின் தொடர்பு கொண்டு அவர்களின், அருள் அறிவுரைகளின்படி ஆட்சி நடத்துதல் வேண்டும்; ஞானிகளும் அரசர்களை ஆட்கொண்டு அவர்களுக்குத் தம் ஆசியுரைகளும் அறிவுரைகளும் வழங்கி, அவர்களை அறநெறியிற் செலுத்தி உய்வித்தல் வேண்டும்.

## திருவள்ளுவர் :

சிறந்த இந்தச் செந்நெறியையே, ஆசிரியர் திருவள்ளுவர் தமது திருக்குறளில் வற்புறுத்தியுள்ளார். ஒரு சிறந்த அரசன் படைஉரிமை பெற்றிருந்தால் மட்டும் போதாது; சிறந்த தவவலிமை உடைய சான்றோர்களின் துணையையும் பெறுதல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. இதனை அவர் தமது திருக்குறளில், "பெரியாரைத் துணைக்கோடல்" "பெரியாரைப் பிழையாமை" என்னும் இரண்டு அதிகாரங்களால் அழகுற விளக்கியுள்ளார். 'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, திறனறிந்து தேர்ந்துகொளல்' எனவும்; 'உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்' எனவும் வரும் திருக்குறள்கள் ஈண்டுக் கருதுதற்கு உரியன.

இந்நுட்பம் உணர்ந்த இராசராசசோழன், கருவூர்த்தேவரைத் தனது ஞானசிரியர் ஆக ஏற்றுப்போற்றி, அவர் தம் திருவுளக் குறிப்பின் வழிநின்று நன்கு ஒழுகினான். அதனாலேயே அவன் சிறந்தபல நலங்களைப் பெற்று விளங்கினான். சிவபெருமான்பால் அவன் கொண்டிருந்த பக்தியும், திருமுறைகளில் அவனுக்கு இருந்த ஈடுபாடும், கோயில்கள் எடுப்பித்தலி

---

"Until philosophers become kings, or the kings and princes of this world have the spirit and power of philosophy, and political greatness and wisdom meet in one, and those commoner natures who pursue either to the exclusion of the other are compelled to stand aside, cities will never have rest from their evils; no, nor the human race, as I believe,—and then only will this our State have a possibility of life and behold the light of day"

—Dialogues of Plato,
The Republic.

லும், அவற்றில் நித்திய நைமித்திய பூசைகள் சிறப்புற நிகழச் செய்வதிலும், அவன்பால் அமைந்திருந்த அளவிலாப் பேரார்வமும் பிறவும், கருவூர்த்தேவரின் தொடர்பினலேயே, அவன்பால் வளர்ந்தோங்கிப் பெருகி நின்றன எனத் துணிந்து கூறலாம்.

சுருங்கக் கூறலுறின், விசய நகரப் பேரரசர்கள் ஆகிய ஹரிஹரன் புக்கன் என்போர்கட்கு **வித்தியாரண்ய முனிவர்** போலவும்; மகாராட்டிர மன்னன் ஆகிய வீரசிவாஜிக்குச் **சமர்த்த இராமதாசர்** போலவும், இராசராச சோழனுக்குப் பல்லாற்ருனும் இனிய நற்றுணையாக இருந்து, ஏனைய பல மன்னர்களைப் போலப் புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, அவனை மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து, நவையறும் ஆசிகள் நல்கி, ஆட்கொண்டு காத்தருளியவர் கருவூர்த்தேவரே எனின், அது மிகையாகாது. இராசராச சோழன் (கி. பி. 985—1014), இராசேந்திர சோழன் (கி. பி. 1012—1044) என்னும் சோழப் பேரரசர்கள், செங்கோல் ஆட்சி செலுத்தியதுடன், சிவபக்திக்கு நலங்களிலும் சிறந்து விளங்கியமைக்குக் கருவூர்த்தேவரே காரணம். இதனை,

> **'' அங்கை ஒடு ஏந்திப் பலிதிரி கருவூர்**
> **அறைந்த சொல் மாலையால் ஆழிச்**
> **செங்கையோடு உலகில் அரசு வீற்றிருந்து**
> **திளைப்பதும் சிவனருட் கடலே ''**

எனவரும் திருவிசைப்பாச் செய்யுட் பகுதியே தெளிவுற விளக்கும்.

## திருவிசைப்பா :

கருவூர்த் தேவரின் பாடல்கள், திருவிசைப்பா எனப்படும் ஒன்பதாம் திருமுறையிற் சேர்க்கப் பெற்றுள்ளன. சிதம்பரம் (கோயில்), திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடை மருதூர் என்னும் பத்துத் தலங்களைக் கருவூர்த் தேவர் பாடியிருக்கின்ருர்.

சிறந்த ஞானிகளாகவும் கவிஞர்களாகவும் விளங்கும் அருளாளர்களைத் தேவர்கள் என்று சிறப்பித்து வழங்குதல், அக்காலத்து மரபு போலும். கபிலதேவர் பரணதேவர் நக்கீர தேவர் கல்லாடதேவர் திருநாவுக்கரசுதேவர் எனப் பதினென்ரும் திருமுறையில், நம்பியாண்டார் நம்பிகள் குறித்திருத்தல் காணலாம். திருவள்ளுவதேவர் திருத்தக்கதேவர் முதலிய வழக்காறுகளும் ஈண்டுக் கருதத் தக்கன. இவர், தம்மைக் கருவூர் என்றும், கருவூரன் என்றும் குறிப்பிட்டுக் கொள்கின்ருர்.

'' அருமருந்து அருந்தி அல்லல்தீர் கருவூர் '' என்று, இவர் தம்மைச் சொல்லிக் கொள்வதனல், இவரைக் 'கருவூர்ச் சித்தர்' எனவும் வழங்குவர். இவர்தம் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புக்கள் ஏதும், நமக்கு விளக்கமாகக் கிடைக்கவில்லை. (Greatest men have shortest biographies). தீந்தமிழ்மாலை, அமுதம் ஊறிய தமிழ்மாலை, அமுதுறழ் தீந்தமிழ்மாலை, ஆலை அம் பாகின் இனிய சொல், என்றதற்கு ஏற்ப இவர்தம் பாடல்கள் இன்சுவை நிரம்பித் திகழ்கின்றன: தத்துவ ஞான அனுபவக் கருத்துக்கள் மிக்கு விளங்குகின்றன.

## பனுவற் படிவழி :

(1) சைவ சித்தாந்தம் என்னும் தமிழகத்துத் தத்துவக் கொள்கையானது, பரந்து விரிந்த நோக்குடையது; எல்லாச் சமயக் கொள்கைகளையும் ஏற்ற பெற்றி போற்றிச் சோபான முறைப்படி தழுவிக் கொள்ளுவது. ''புறச் சமய நெறி நின்றும், அகச் சமயம் புக்கும், புகல் மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத் துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேதசிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்ருல், சைவத் திறத்து அடைவர்; அதிற் சரியை கிரியா யோகம் செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'' என்று பிற்காலத்துப் போந்த அருள்நந்தி சிவாசாரியர், சைவசித்தாந்தத்துக்குரிய இந்தச் சோபான நெறியின் இயல்பினை நன்கெடுத்து விளக்கியருளினர்.

சிவஞானபோதப் பேருரையில், ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள், இச்சோபான

நெறியின் இயல்பினை விளக்குவதற்கு, மேற் கோள் காட்ட வேண்டிய நிலையில், நம் கருவூர்த் தேவர் அருளிய

''பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுரு வண்ணம்,
எந்தையும் தாயும் யானும்என் றிங்ஙன்
எண்ணில்பல் ஊழிகள் உடனாய்,
வந்தணு காது நணுகியுட் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே''

என்னும் திருவிசைப்பாச் செய்யுளையே சிறப் புடையதாகத் திறந்தெரிந்து எடுத்து மேற் கோள் காட்டியிருக்கின்றார்.

### சமய சமரசம் :

(2) சைவ சித்தாந்தம், எந்தச் சமயத்தை யும் இகழ்வதில்லை; எச்சமயத்திற்குரிய கடவுள ரையும் விலக்குவதில்லை. ''யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொருபாகனார் தாம் வருவர்'' எனக் கொண்டு, சமரச ஞானச் சான்றாண்மை நலம் தழீஇ ஒழுகுவது சைவசித்தாந்தம். இக்கருத் தினைச் சைவசித்தாந்த ஞானாசிரியர்களுக்கு முன்னரேயும் கூட, வற்புறுத்திப் பாடியருளிய வர் கருவூர்த் தேவர்!

"சுருதி வானவனும்; திருநெடு மாலாம்;
சுந்தர விசும்பின் இந்திரனும்;
பருதி வானவனும்; படர்சடை முக்கட்
பகவனும்; அகவுயிர்க்கு அமுதாம்;
எருது வாகனனும்; எயில்கள் மூன்று எரித்த
ஏறு சேவக னுமாம்;
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்ட சோளேச்சரத் தானே"

என்னும் கருத்தைக் கருவூர்த் தேவர் அறி வுறுத்தி யருளிய திறத்தினாலேயே, இராசராச சோழன் இராசேந்திர சோழன் என்பவர்கள், சைவம் வைணவம் சமணம் பௌத்தம் முதலிய பலவேறு சமயங்களின் மாட்டும், சமநோக்கும் சமரசவுணர்வும் கொண்டவர்களாய் நடுநிலை பிறழாது நல்லாட்சி நடத்திப் போந்தனர்.

### பாவ புண்ணியம் :

(3) நம் இந்திய நாட்டுச் சமயங்கள் யாவும் பாவ புண்ணிய நம்பிக்கையாகிய வினைக் கொள்கையை (Theory of karma) உடன் படுவன. அவரவர் செய்த பாவபுண்ணியப் பயன்களை, அவரவர்கள் அடைந்தே தீர்தல் வேண்டும். அவைகளினின்று தப்பியுய்தல் இயலாது என்று, பொதுவாக எல்லாச் சமயங்களுமே கூறும். புண்ணிய பாவப் பயன்களை அநுபவிக்குங்கால், அவற்றுள் எது முன்னே அநுபவிக்கப்படும் என்னும் ஓர் ஐயம் நமக்கு எழுகின்றது. இதற்குத் தம் பாடல் ஒன்றில் கருவூர்த் தேவர் விளக்கம் தருகின்றார். பாலுடன் கலந்த நீரானது, மூட்டிய தீயினால் காய்ச்சப்பட்ட மாத்திரத்தில் பாலைவிட்டு நீங்கி விடுவதுபோல, ஒருவன் செய்த பாவங்கள் முதலில் அநுபவிக்கப்பட்டுக் கழியும்; பாலைப்போன்று புண்ணியத்தின் பயன்கள் பின்னே நுகரப்பெறும் என்றும்; இங்ஙனம் கழிந்தொழியும் வகை இறைவன் தமது அறிவினுக்கு அறிவாய்ப் புகுந்து, தம் யோகத்தினிற் பொலிந்து அருள் புரிந்தான் என்றும், கருவூர்த்தேவர் பாடுகின்றார்.

"பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போல்
பாவம் முன் பறைந்து, பால் அனைய
புண்ணியம் பின் சென்று அறிவினுக்குஅறிவாய்ப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து,
நுண்ணியை எனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை ஒடுங்க, நீ வந்தென்
கண்ணினுள் மணியிற் கலந்தனை; கங்கை
கொண்டசோ ளேச்சுரத் தானே"

### சீவன்முத்தர்கள் :

(4) சீவன்முத்தராகவும், சித்தபுருடரா கவும் சிறந்து திகழ்ந்திருந்த கருவூர்த்தேவர், தமது திருவிசைப்பாப் பாடல் ஒன்றில், சீவன் முத்தர்களின் சிறப்பியல்பினைத் திறம் தெரிந்து விளக்குகின்றார். ஞானிகள் நம்மைப் போலவே உலகில் இருந்து வருவார்க ளாயினும், உலக பந்த பாசங்களும், துன்பங்களும், அவர்களை ஒரு சிறிதும் தாக்குவதில்லை. நம்மையே அவைகள் தாக்கி இடர்ப்படுத்துகின்றன. அஃது எதுபோல எனின், குளையில் நெருப்பினாற்சுடப்

பெருத பச்சை மட்கலங்களை மழைநீர் கரைத்தொழிக்கும்; சூளையில் வைத்து நெருப்பினுற் சுடப்பெற்ற மட்கலங்களை அஃது ஒன்றும் செய்தல் இயலாது. அவைகள் அந்நீரைத் தம்மிடம் ஏற்று நிரப்பிக்கொண்டு நிற்கும். அதுபோல, இறைவனது திருவருள் ஒளியினுலும் தியானத்தினுலும் தூய்மை அடையப்பெற்ற ஞானத்தவ முனிவர்களை, இவ்வுலக பந்த பாசங்களும் துன்பங்களும் ஒன்றும் செய்யமாட்டா. இக்கருத்தினை,

"எழில் ஐ ஆழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந்து உருகி
அழலை ஆழ்பு உருவப் புனலொடும் கிடந்தாங்கு,
ஆதனேன் மாதரார் கலவித்
தொழிலை ஆழ் நெஞ்சம் இடர்ப்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல் யாமத்து, ஓர்
மழலை யாழ் சிலம்ப வந்து, அகம் புகுந்தோன்
மருவிடம் திருவிடை மருதே"

எனவரும் இனிய திருவிசைப்பாவில், நம் கருவூர்த்தேவர் நன்கினிது எடுத்து விளக்கியருளிச் செய்திருத்தல், நாம் பெரிதும் கருதி மகிழ்தற்கு உரியது.

(5) கருவூர்த் தேவரின் 'அமுதுறழ் தீந்தமிழ் மாலை'யின் அரிய இனிய சுவைத்திறனுக்குப் பின்வரும் கருத்தமைந்த பாடல்களை எடுத்துக் காட்டலாம்; சாட்டியக்குடி என்னும் தலத்தில் ஏழ் இருக்கை என்னும் பெயர்கொண்ட கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு மாலை, பாம்பு; உண்ணுகின்ற பாத்திரம் மண்டை ஓடு; பட்டத்துயானை எருது; அன்பர்களின் கண்கள் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீரே, திருமஞ்சன நீர்; மலைமகள் பட்டத்து மனைவி; பூசுகின்ற சாந்தம், திருநீறு; இனிய கீதம் வேதங்கள்; சடையே திருமுடி; அன்பர்களின் இதயமே கோயில்.

"பாந்தள் பூண் ஆரம்; பரிகலம் கபாலம்;
பட்டவர்த்தனம் எருது; அன்பர்
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை;
மலைமகள் மகிழ் பெருந் தேவி;
சாந்தமும் திருநீறு; அருமறை கீதம்;
சடை, முடி; சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகை;
ஏழ் இருக்கையுள் இருந்த ஈசனுக்கே."

(6) சாட்டியக்குடி என்னும் தலத்தில், அக்கினி தேவனின் வடிவத்துடன் இரண்டு முகங்களும், மூன்றுகால்களும், ஏழுகைகளும் உடையவராக எழுந்தருளி விளங்கும் சிவபெருமானுக்குச் சிறந்த புதல்வன் முருகன்! மனைவி பார்வதி! மருமகன் மன்மதன்! மருமகனின்தாய் திருமகள்! மாமன் இமயமலை அரசன்! தோழன் குபேரன்!

"திருமகன் முருகன்; தேவியேல் உமையாள்;
திருமகள் மருமகன் தாயாம்;
மருமகன் மதனன்; மாமனேல் இமவான்;
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனும் சிவபுரன் தோழன்,
தனபதி; சாட்டியக் குடியார்
இருமுகம் கழல்மூன்று ஏழுகைத் தலம் ஏழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே

(7) நமது இந்துமதத்தைக் குறைகூறி இழித்துப் பழித்துரைக்கும் ஒருசிலர், "இந்து மதம் உலகியற்கைக்கு ஏலாதது, மறுமைக்கே இயைந்தது" (Unworldly & other worldly) என்று கூறுவது உண்டு. அவர்தம் கூற்றுப் பொருந்தாது என்பது, "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" "இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம்" என்பன போல் வரும் சான்ருேர் திருமொழிகளால் உணரப்படும். கருவூர்த்தேவர், சிவபெருமானை வணங்கினுல் நாம் எல்லா நலங்களையும் பெறலாம் என்கின்ருர். "கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவபெருமானை அன்புடன், திருவைந்தெழுந்து ஓதி உள்ளம் உருகி வழிபட்டால், அவன் எட்டுத்திசைகளின் ஆட்சியையும், ஏராளமான பொன்னையும் நவமணிக் குவியல்களையும், பசும் பொன்மாளிகைகளையும், பவளவாயையுடைய அழகிய மகளிரின் இன்ப நுகர்ச்சியையும், கற்பகச் சோலையையும் ஆகிய எல்லாவற்றையும், அளித்தருள்வான். இத்தகைய அற்புதத் தெய்வம் வேறு ஒன்று உளதோ?" என அவர் வினவுகின்ருர்.

"அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண்திசைக் கனகம்

பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவள வாயவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே''

மேலும் அவர் இத்தகைய சிவபெருமானை நாம் வணங்க வேண்டுவதன் இன்றியமையாமையினையும், நமக்கு இனிதெடுத்து வற்புறுத்தி விளக்குகின்றார்.

'தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவை நூறுயிரம் கூறிட்டு,
அத்தில் அங்கு ஒருகூறு உன்கண் வைத்தவர்க்கு
அமருலகு அளிக்கும் நின்பெருமை''

எனவரும் பாடலில் ''இழிந்த மகளிரின்பால் அளவற்ற விருப்பம் கொண்டு, நீங்கள் வீணே அலைந்து திரிந்து உழலுகின்றீர்கள். அம்மகளிர் பால் நீங்கள் வைத்துள்ள அளவற்ற காதலை நூறுயிரம் கூறு செய்து, அதில் ஒருகூறு அளவு கொண்ட அன்பையேனும் $\left(\frac{1}{100,000}\right)$, நீங்கள் இறைவன்பாற் செலுத்துவீர்களாயின் அவன் உங்களை அமரர் உலகத்தில் இருத்தி ஆளவைப்பான்''என்று கூறி, நமக்கு இறைவழிபாட்டின் சிறப்பினை நன்கெடுத்து விளக்குகின்றார் கருவூர்த்தேவர்!

"Ah! did we take for heaven above
But half such pains as we
Take day and night, for women's love,
What angels we should be!"

என்று, ஆங்கிலக் கவிஞர் ஒருவர் (Moore) பாடியுள்ள பாடல், இங்கு நாம் சிந்தித்து இன்புறத் தக்கதாகும்.

## முடிவுரை :

இங்ஙனம் இனிய பற்பல கருத்துக்கள் அமைந்த பாடல்கள் பல, கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவில் அடங்கியுள்ளன. அவைகளை அன்புடன் ஓதி, இராசராசசோழனும் இராசேந்திரசோழனும் போல, நாமும் கருவூர்த்தேவரின் திருவருளைப் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

# தஞ்சை இராசராசேச்சரம்

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பருதி ஒன்றுநூ றுயிர கோடி,
அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ! அங்ஙனே அழகிதோ! அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம் பருவரை ஞாங்கர் வெண்திங்கள்
இலைகுலாம் பதணத்து இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத்து இவர்க்கே!

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர் ஏம்பலித் திருக்க,
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த எளிமையை என்றும்நான் மறக்கேன்!
மின்னெடும் புருவத் திளமயில் அனையார் விலங்கல்செய் நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத்து இவர்க்கே.

— கருவூர்த்தேவர்.

# ''அயல்நாட்டு அறிஞரின் அன்புக்கடிதம்''

நமது தமிழ்நாடு அரசின் ஆதரவில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில், கடந்த 11 ஆண்டுகளுக்கும் மேலாகத் ''திருக்கோயில்'' இதழ் சிறந்த முறையில் நடந்து வருவதனை, அன்பர்கள் அனைவரும் அறிவர். திருக்கோயில் இதழின் சிறந்த பணியினை, அவ்வப்போது பெருமக்கள் பலர் பாராட்டி வருகின்றனர். அதன் பத்தாம் ஆண்டு நிறைவின்போது, நமது தமிழகத்தில் உள்ள திருமடங்களின் தலைவர்களும், மற்றும்பல அறிஞர் பெருமக்களும், அதனைப் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றனர். 'திருக்கோயில்' இதழ், இலங்கை-பர்மா-மலேசியா சிங்கப்பூர்-தென்னாப்பிரிக்கா முதலிய கடல்கடந்த நாடுகளுக்கும் சென்று, அன்பர்களை மகிழ்வித்து வருகின்றது. அண்மையில், அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகின்ற அறிஞர் ஒருவர், எழுதியுள்ள கடிதம், தமிழ் மொழிபெயர்ப்புடன் இங்கு வெளியிடப்பெறுகின்றது :

## விஸ்கன்சின் பல்கலைக்கழகம்

1224 வேன்இசே, 1220 லிண்டன் டிரைவ்

மேடிசன், விஸ்கன்சின் 53706

இந்தியக் கலை ஆராய்ச்சித்துறை,

மார்ச் 2, 1970.

உயர்திரு ஆணையர்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை—34,
தமிழ் நாடு, தென்னிந்தியா.

அன்பார்ந்த ஐயா,

நான் விஸ்கன்சின் பல்கலைக் கழகத்தில், தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் கற்பித்துக் கொண்டிருக்கின்றேன். அண்மையில் முதன்முதலாகத் தங்களுடைய ''திருக்கோயில்'' இதழைக் காணப்பெற்றேன். அதனுடைய உயர்ந்த தரத்தினால், நான் மிகப்பெரிதும் கவரப்பெற்றேன். இதுவரையில் யான்படித்த சில கட்டுரைகள் அனைத்தும், மிகப்பெரிதும் பொருள் பொதிந்தனவாகவும், என்னுடைய தமிழறிவை மிகுதிப்படுத்தி வளர்ப்பனவாகவும் அமைந்து திகழ்கின்றன.

அதனால் தங்களுடைய இதழுக்குச் சந்தா செலுத்துவதற்கும், கிடைக்கக்கூடிய பழைய இதழ்கள் எல்லாவற்றையும் பெறுவதற்கும், யான் ஆவலுடையவனாய் இருக்கின்றேன். சந்தாவிற்காக நான் பத்து டாலர்களுக்கான காசோலையை அனுப்பியிருக்கிறேன். அதனைத் தாங்கள் சென்னையில் உள்ள 'முதல் தேசிய வங்கியில்' கொடுத்து, நாணயமாக்கிக் கொள்ளலாம். அன்புகூர்ந்து, என்னை ஒரு சந்தாதாரராகப் பதிவுசெய்து கொள்ளுங்கள். கடல்கடந்த அஞ்சற் செலவுக்காகத் தேவையான அளவு, சந்தாத் தொகையைக்கூட்டி மிகுதிப் படுத்துதல் குறித்து, அன்புகூர்ந்து தாங்கள் தயக்கம் கொள்ளவேண்டா. கிடைக்கக்கூடிய பழைய இதழ்களை அனுப்புவதற்கும், இதில் எஞ்சி நிற்கும் தொகையை அன்புகூர்ந்து பயன்படுத்திக் கொள்ளுங்கள். பழைய இதழ்கள் எத்தனை கிடைக்கும் என்பது பற்றியும், அவைகளை வாங்கு

வதற்கு இன்னும் கூடுதலானபணம் எவ்வளவு அனுப்பவேண்டும் என்பதுபற்றியும், தாங்கள் விடையளிக்கக்கூடுமானால், நான் மிகவும் நன்றி உணர்வுடையவனாக இருப்பேன். நான் அனுப்பும் இப்பணத்திலிருந்து, தங்களுக்கு நேரும் அஞ்சற்செலவுத் தொகையை, அன்புகூர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள்.

நன்றியுடன்,

உண்மையுள்ள, தங்கள்
(ஒ-ம்) ஜார்ஜ் எல். ஆர்ட்
மூன்றாம் துணைப் பேராசிரியர்.

800 009 158578

THE UNIVERSITY OF WISCONSIN
1224 VAN HISE: 1220 LINDEN DRIVE
MADISON: WISCONSIN 53706

Indian Language & Area Center

Department of Indian Studies.
March 2, 1970.

The Commissioner,
Hindu Religious and Charitable Endowments
(Admn.) Department,
Madras-34. Tamilnadu, South India.


Dear Sir,

I am teaching the Tamil language and Tamil literature at the University of Wisconsin. I have recently seen for the first time your magazine "Thirukkoyil", and I was extremely impressed by its high quality. The few articles I have read so far have all been extremely informative, adding immensely to my knowledge of Tamil.

I am therefore anxious to subscribe to your magazine and to receive all back issuse which are available. I am sending Ten Dollars for a subscription, in a cheque which can be cashed at the First National Bank in Madras. Please enter me as a subscriber. Please do not hesitate to add to the subscription price any amount which is necessary for overseas postage. Please use any money left over to send available back issues. I would be grateful if you could reply telling me how many back issues may still be obtained and informing me if any extra money is needed to purchase them. Please take any postage you may incur from the money I am sending.

With Thanks,

*Sincerely Yours.*
Sd/. GEORGE L. HART, III
Assistant Professor.



வலிவலம் திரு இருதயகமலநாத சுவாமி கோயிலில், அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு **திரு, கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள், நாதசுரக் கல்லூரியைத் துவக்கி வைத்தல் (8-3-70).



நாகப்பட்டினம் திரு. மெய்கண்ட மூர்த்தி திருக்கோயிலில், மெய்கண்ட மூர்த்தி திருமண மண்டபத்திற்கு, அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு **திரு. கே. வி. சுப்பையா, B.A.,** அவர்கள் அடிக்கல் நாட்டுதல் (8-3-70).



இந்திய அரசின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. **ஒய். பி. சவான்** அவர்களும், தமிழ் நாடு அரசின் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களும், ஸ்ரீ ரங்கம் **ஸ்ரீரங்கநாதசுவாமி** கோயிலுக்கு வருகை தந்தபொழுது, நகராட்சித் தலைவர்களாலும், அறங்காவலர் பெருமக்களாலும், கோயிற் சிறப்பு மரியாதைகளுடன் வரவேற்கப்பெறுதல். ( 22 - 3 - 70 )

*Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.*
*Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.*